"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம் :1876

# சத்தியவேத பாதுகாவலன்

"கதலிக் பிரஸ்" யாழ்ப்பாணம் தொலைபேசி : 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

சத்தியவேத பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள் :
ரூபா 9·00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத்தகம் | யாழ்ப்பாணம், 1964-ஆ மாசி மாதம் 8-ந்த சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 6-ம் இலக்கம்

# கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமை இயக்கம்

## "தடைகள் எதையும் நாம் காணோம்"

**—பத்திரியாக்கு அத்தனகோறஸ்**

"கிறீஸ்தவ சபையின் ஒற்றுமை உருப்படுவதற்குத் தடையாய் இருப்பதாக நாம் ஒன்றையும் காணோம்" என அண்மையில் கொன்ஸ்தாந்திநோப்பிள் பத்திரியாக்கு அத்தனகோறஸ் அவர்கள் இத்தாலிய பத்திரிகை நிருபர் ஒருவருக்குக் கூறினார். "நாம்" என்று கூறும் பொழுது அதில் பாப்பரசரையும் சேர்த்துக் கொண்டீர்களா? என நிருபர் கேட்க "இல்லை, பாப்பரசருக்காக யான் எவ்வாறு பேசலாம்? ஆனால், அப்பக்கத்தில் தடைகள் இருக்குமாயின் எமக்கும் அவை தடைகளாகவே காணப்பட வேண்டுமல்லவா? அப்படிக்காணப்படாததாலேயே இவ்வாறு கூறினேன்," என்றார் அத்தனகோறஸ் பத்திரியாக்கு அவர்கள்.

மேலும், தமது அதிகாரத்தின் கீழ் உள்ள பல திருச்சபைகளைப் பற்றி அவர் கூறுகையில் இவைகள் யாவும் ஒரு வகைச் சமஷ்டி ஆட்சியினால் இணைக்கப்பெற்றிருக்கின்றன என்றும், விசுவாச சத்தியங்களில் மாத்திரம் கொன்ஸ்தாந்திநோப்பிள் பத்திரியாக்குக்கு அமைவுள்ளன என்றும் கூறினார். இவரின் அதிகாரத்தின் கீழ் 25 கோடி விசுவாசிகள் உள்ளனர்.

பாப்பரசரைத் தாம் பலஸ்தீனாவிற் சந்திக்க ஒழுங்கு செய்தபோது அதற்குத் தமது சபையோர் பலர் எதிர்ப்புக் காட்டினார்களெனினும் 6-வது சின்னப்ப தந்தை தமது ஆழ்ந்த தாழ்மையினாலும், அன்பினாலும் சகல எதிர்ப்பையும் தகர்த்து எறிந்து விட்டாரென்றும் பத்திரியாக்கு அவர்கள் மேலும் பகர்ந்தார்.

## பிற கிறீஸ்தவ சபைகளுடன் தொடர்பு கொள்ளுகிறார் பாப்பரசர்

### ● ஆங்கிலநாட்டில்:

பாப்பரசரின் ஸ்தானாதிபதியாக அண்மையில் நியமனம் பெற்று மகத்தான வரவேற்புப் பெற்ற காடினால் அதிமேற்றிராணியாரவர்கள் சென்றவாரம் ஆங்கில கிறீஸ்தவ சபைத் தலைவராகிய டக்டர் ரும்ஸே அவர்களை அவரது இல்லத்துக்குச் சென்று தரிசித்துக்கொண்டார்.

### ● பலஸ்தீனாவில்:

பொலக்னா நகர அதிமேற்றிராணியாராகிய லெக்காரோ கருதினாலவர்கள் கிழைத்தேய ஒதொடக்ஸ் சபையைச் சேர்ந்த அன்ரியோக்கு நகரபத்திரியாக்கு அவர்களைச் சந்திக்குமாறு பரிசுத்த பாப்பரசரால் அனுப்பப்பட்டிருக்கின்றார்.

### ● ருஷியாவில்:

ருஷியா தேச ஒதொடக்ஸ் சபை பத்திரியாக்குவாகிய அலெக்சியஸ் அவர்கள் 6-வது சின்னப்ப தந்தை கொன்ஸ்தாந்திநோப்பிள் பத்திரியாக்குவை அண்மையில் பலஸ்தீனா தேசத்தில் சந்தித்துக் கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமையைப் பற்றிப் பேசிக்கொண்டது பற்றி பெரிதும் மகிழ்ச்சி தெரிவித்தார். அதனால் சகல கிறீஸ்தவசபைகளுக்கும் கத்தோலிக்கதிருச்சபைக்கும் இடையில் உள்ள தொடர்புகள் திருத்தம் அடைந்துள்ளனவென்றும், மேலும் சிரடையவும், விரைவில் ஒற்றுமை காணவும் தாமெல்லோரும் ஒத்துழைக்கத் தேவனுடைய கிருபையை இரந்துகொள்வதாகவும் நிருபரிடம் கூறினார்.

## "இயக்கத்தில்உண்டு சிறு குழப்பம்"

**—ஆங்கில ஹீனன் அதிமேற்றிராணியார்**

திருச்சபையின் ஒற்றுமை முயற்சிகள் அதன் போதனையில் சில மாற்றம் உண்டாயிருப்பதைக் காட்டுகின்றது என சில பிறசமயத்தவர்களும், சில கத்தோலிக்கர்கள் தன்னும் எண்ணிக்கொள்வதே இக்குழப்பமாகும் என்பதை அதிமேற்றிராணியார் அவர்கள் ஒற்றுமை வாரச் சொற்பொழிவு ஒன்றில் எடுத்துக் காட்டினார். போதனைகளில் இம்மியளவும் மாற்றம் இருக்கமுடியாது எனவும், முன்னுள்ள சில போதனைகளுக்குச் சரியான விளக்கம் பெற்றுக் கொள்ளாததே குழப்பத்தின் காரணமென்றும் கூறி அதற்கு உதாரணமாக ஞானஸ்நானம் பெறாதவர்களுக்கு இரட்சணியமில்லை என்ற கூற்றை விளக்கிக் காட்டியருளினார்.

## 23-ம் அருளப்பரின் பூதஉடம்பு

தமது பூதஉடம்பை அர்ச். ஜோண் லத்தறன் மகாதேவலயத்தில் அடக்கம் பண்ணும்படி 23-ம் அருளப்ப பாப்பரசர் குறிப்பிட்டிருந்தபோதிலும், அவரதுபிரேதம் இப்போது அடக்கப்பட்டிருக்கும் அர்ச். பேதுரு மகாதேவாலயத்திலே தான் தொடர்ந்து வைக்கபபடுமென உத்தியோக முறையில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதுவிஷயமாக ஆராய்ந்து தக்க முடிவுக்கு வருமாறு நியமிக்கப்பட்ட குழுவினர் சிபாரிசு செய்ததன் பின்பே 6-வது சின்னப்ப தந்தை இம்முடிவுக்கு வந்திருக்கின்றார்.

### கருதினால்மாரின் எண்ணிக்கை 78

கருதினால் கார்லோ அவர்கள் அண்மையில் மரணமடைந்ததால் இன்று பரிசுத்த கருதினால்மார் குழுவின் தொகை 78 ஆகக் குறைந்து விட்டது. இறந்து போன கருதினாலவர்கள் 2-ம் உலக யுத்தத்தின் பின் ஜேர்மனி தேசத்துக்கு வத்திக்கான் மூலம் கிடைத்த உதவிகளைச் சீர்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தவர். 22-ம் அருளப்ப பாப்பரசரால் கருதினால் பதவிக்கு உயர்த்தப்பட்டவர்.

## ஆபிரிக்க கொங்கோ பிரதேசத்தில்

கத்தோலிக்கரை மாத்திரமல்ல, புரொட்டஸ்தாந்து மதத்தவர்களையும் ஒழித்துக்கட்டுவோம் என்று கங்கணம் கட்டி நிற்கின்றனர் கொங்கோ பிரதேசத்தில் சில தீவிரவாதிகள் இவர்களின் கோபாவேசத்திற்குச் சென்ற மாதம் பெல்ஜிய தேசத்தைச் சேர்ந்த மூன்று கத்தோலிக்கக் குருமார் பலியாகினர். அவர்கள் ஓ. எம். ஐ. (O. M. I) சந்நியாச சபையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பின்வருபவர்கள் :

1. வண. ஜெரூட் டிபீவர் சுவாமியார், வயது 43

கிலம்பே பிரதேச சந்நியாச அதிபர்.

2. நிக்லஸ் ஹார்டி சுவாமியார், வயது 45

இவர் கல்வித் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்.

3. பியறே லெபனஸ் சுவாமியார், வயது 44

மிஷன் வேலை நடத்தி வந்தவர்

இவர்களைக் கொன்ற பயங்கர குழுவினரின் தலைவர் முன்னாள் பிரதமராயிருந்த லுமும்பா என்பவரின் மந்திரிமாருள் ஒருவரான முலெலே என்பவர் என்று கருதப்படுகின்றார். இவரின் தலைமைப்பீடம் இருக்கும் இடம் பிறசாவில். இது பழைய பிரான்ஸ் கொங்கோவின் தலைநகரம். கத்தோலிக்க குருமார்களைக் கொன்று தொலைப்பதுடன் நின்றுவிடாது புரொட்டஸ்தாந்து ஸ்தாபனங்களையும் தீமூட்டி அழித்துவருகின்றனர்.

## "தொழிலாளர்களைத் திருச்சபை என்றும் ஆதரிக்கின்றது"

**—6-வது சின்னப்ப தந்தை**

அர்ச். சின்னப்பர் ஸ்பானியா தேசத்துக்குச் சென்ற 19-ம் நூற்றாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்துக்குத் தமது விசேஷ தூதுவராக அனுப்பப்பட்டகருதினால் சிக்கொக்னியானி ஆண்டவர் மூலமாக விடுத்தசெய்தியில் 6-வது சின்னப்ப தந்தை திருச்சபை தொழிலாளர்களின் நன்மையில் என்றும் சிரத்தை கொண்டு விளங்கி வந்திருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றார். மேலும் அவர் கூறுவதாவது:

தொழிலாளர்களுடைய நன்மைக்காகத் திருச்சபை என்றும் முயன்று வந்திருக்கிறது, சந்நியாச சபைகளின் முன்னேற்றத்தில் மாத்திரம் திருச்சபை விழிப்பாய் இருந்து வந்தது என்று கூறுவது அபாண்டமாகும், சென்ற பல நூற்றாண்டுகளாகப் பாப்புமார் பலர் விடுத்த நிருபங்களை வாசித்தவர்கள் இவ்வாறு ஒருபோதும் கூறமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோலகட்டி ஆச்சிரம ஸ்தாபகர்
# தோமஸ் சுவாமியார்

— பொ. சபாபதிப்பிள்ளை —

உடுவில் கிராமசபைக் காரியாலயத்துக்கு எனது கடமைக்குப் போவதற்காக வழமைபோல 27-1-64 திங்கட்கிழமை அதிகாலை பருத்தித்துறை பஸ் நிலையத்தை அடைந்தேன். சங்கானையைநோக்கிப் போவதற்காகப் பஸ் வண்டி ஆயத்தமாயிருந்தது. அதில் ஏறி அமர்ந்தேன். "உங்களின்ரை தோமஸ்சுவாமியார் காலமாகிவிட்டார்" என்று என்னருகிலிருந்த தும்பளையைச்சேர்ந்த மரியாம்பிள்ளை அருளானந்தம் எனக்குச் சொன்னார். கேட்டதும் வண்டியிலிருந்தபடியே பெரியார் தோமஸ் சுவாமியாருக்கு நான் செலுத்தவேண்டிய மரியாதையை மவுனமாகச் செலுத்தினேன். சத்தியவேதத்தைச்சேர்ந்த அந்தவாலியர் சிவமதத்தைச்சேர்ந்த என்னை நோக்கி **"உங்களின்ரை** தோமஸ் சுவாமியார்" என்று சொன்னாரென்றால், பெரியார் தோமஸ்சுவாமியாரில் எனக்குள்ள பக்தி விசுவாசத்தை முன்னமே நன்குணர்ந்திருக்கின்றாரென்பது சொல்லாமலே விளங்கும். அருளானந்தம் மயிலிட்டிக் கிராமசபையில் எழுத்தாளராகக் கடமைபார்க்கிறார். தினசரி என்னோடு பிரயாணஞ்செய்பவர்.

அச்சுவேலியிலுள்ள பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலையில் நான் சிலகாலம் உபாத்தியாயராக இருந்தகாலத்தில் இந்தப்பெரியாரிடத்தில் அடிக்கடி போவேன். மானிடப்பதாகிய என்னைத் தன்னுயிர்த்தனயனென அணைத்து ஆத்மீக ஞானப்பாலை ஊட்டுவார். "செபம்" "தவம்" என்ற இரண்டு பதங்களின் உயர்ந்த தத்துவம் பொதிந்த கருத்துக்களை இலகுவான பாஷையில் எனக்கு உணர்த்துவார். நாம் செய்யவேண்டிய கருமங்கள் எல்லாவற்றையும், தவமாகச் செய்யவேண்டுமென்றும், கருமங்கள் முடிந்த நேரமெல்லாம், ஆண்டவனின் தேவாலயத்தில் அமர்ந்தோ, அல்லது தனிமையான ஓரிடத்திலிருந்தோ ஆண்டவனைநோக்கிச் செபம்செய்ய வேண்டுமென்றும், நீண்டநேரம் சலிக்காமல் போதனை செய்வார். கல்விஅறிவு, இயற்கை அறிவு இரண்டும் அற்பமேனுமில்லாத கீர்மூடனாகியநான் அன்னாரின் திருவாயினின்று உதிரும் அமிர்தம் போன்ற மணிவாக்குகளைக்கேட்டு அப்படியே சொக்கிப்போயிருப்பேனென்றால் கற்றவரும் நற்றவரும் அவரின் ஆத்மீக ஞானமிர்தத்தை எவ்விதம் அள்ளி அள்ளிக் குடித்து ஆனந்தம் அடைவார்களென்று என்னால் நினைக்கப்போமோ. ஊழிபெயரினும் தாம் பெயரா சான்றாண்மைக்காழி எனப்படும் இந்தத் தார்மீகவள்ளல் 'மன்னுயிரெல்லாம் தன்னுயிர் தானெனப் பெற்ற சிறந்த தத்துவஞானி. மாதவமெலாந் திரண்டு வருந்தியே தவங்கள் செய்து காதலாயீன்றெடுத்த காதலே ரூபமான அன்னாரின் தெய்வீகத் திருமேனியில் கோவில்கொண்டிருக்கும் ஆன்மாவின் மனம் வாக்குகளிலிருந்து நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அறமும், அன்பும், அருளும் தேங்கிக்கிடப்பது ஒருபுதுமையோ. தன்னுயிர் தானறப்பெற்ற இந்தத் தவசிரேஷ்ட மகாமுனிவரை மன்னுயிரெல்லாம் போற்றிப்புனைந்து தொழுவது இயற்கைதானே.

இவருடைய ஆகார நியமங்களும் பிறவும் மிகவும் விசித்திரமானவை. அவற்றையெல்லாம் நான் அவரைத் தரிசிக்கப்போகும் காலங்களில் அன்பாகச்சொல்லுவார். காலையில் மல்லிக்கசாயம், அதற்குக் கொஞ்சம் உப்புச் சேர்த்துக்கொள்ளுவார், சீனி சேர்ப்பதில்லை. அங்குவதியும் மவுனசந்நியாசிகளுக்கு ஆக்கப்படும் ஆகாரத்தையே அவரும் உட்கொள்ளுவார். காரம், சுவை, கொழுப்புச் சேர்ந்தபதார்த்தம் இடம்பெறுவதில்லை. மாலையில் கொஞ்சம் குரக்கன்கூழ். இரவில் மல்லிக் கசாயம். சுடர்விட்டெரியும் ஆத்மீக ஞானிகளுக்கும் ஆகாரநியமங்களுக்கும் வெகுதூரம். தேவையான மூலாதார சத்துப் பொருட்களை அகண்ட வெளியிலிருந்தும் கிரகித்தெடுத்துக் கொள்ளும் ஆற்றலுள்ளவர்கள் ஆத்மீக ஞானிகள். கதிரை, பஞ்சணை மெத்தைபோன்ற சுக ஆசனங்களை அவர் பாவிப்பதில்லை. சுருங்கச்சொல்லின் என்போன்ற சாமான்ய மக்களால் விரும்பப்படும் சுகங்களில் அன்னாரின் நாட்டம் நாடுவதில்லை. புலன் பொறிகள் தாவிப் பாய்ந்தெடுக்கும் சுகங்களை அறவே ஒழித்தவர். (Total absention from the pleasures of the senses) பொய்புரட்டுகள்எல்லாம் தர்மத்தின் வரம்பை உடைத்து அத்துமீறி நடமாடும் இன்றைய உலகில் பெரியார் தோமஸ் சுவாமியார் ஓர் அபூர்வபிறவி. தொன்மையின் தோன்றல்; தவத்தின் தனிமை; செபத்தின் செம்மல்; அறத்தின் வள்ளல்; அன்பின் கனி; அருளின் ஒளி; கருணைக்கடல்; அவரைக் கண்கொண்டு பார்த்தாலே போதும். நிம்மதி கைமேலே. தோலகட்டியின் அயற்கிராமத்திலுள்ள சிவமதத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பெரியாரை "முனிவர்" என்று சொல்வார்கள்.

ஆச்சிரமத்திலுள்ள மவுனசந்நியாசிகள் எல்லாவேலைகளையும் திட்டமிடப்பட்ட நேரசூசியின்படி செய்வார்கள். சதாமவுனம். இரவும்பகலும் இடைவிடாது இரண்டு சந்நியாசிகள் மாறி மாறி ஆச்சிரமத்திலுள்ள தேவாலயத்தில் செபஞ்செய்துகொண்டிருப்பார்கள். இதன்காரணமாகத் தேவாலயம் எந்தநேரமும் திறந்துவைக்கப்பட்டிருக்கும். இந்தச்சந்நியாசிகள் கவலையில்லாதவர்கள். நித்திய சந்தோஷிகள். அவர்களின் முகத்திலிருந்து வீசும் பிரபை எவரையும் பிரமிக்கச்செய்யும். மித ஆகாரமெனினும் தேகபுஷ்டியுடன் காணப்படுகிறார்கள்.

சாந்தியேரூபமான இந்தத் தவசிரேஷ்ட மகாமுனிவர் நியதிதத்துவத்தைக் கடந்தவர். சர்வவியாபி; மகான்கள் மரிப்பதில்லை. தேகத்தைத் துறப்பது அவர்களுக்கு மரணமல்ல. அது ஒருவிளையாட்டு. அன்னாரின் அருள் ஒளிவீச்சு அந்தப்புனித ஆச்சிரமத்தைப் பல்லூழிகாலம் செவ்வனே பரிபாலிக்கும். அன்னாரின் தெய்வீகத்திருமேனியை நல்லடக்கஞ் செய்தஇடம் ஒரு தேவாலயமாகப் பொலிந்து விளங்குமென்பது எனது திடமானநம்பிக்கை. சத்தியவேதம் செய்த தவமேதவம்.

## மரணசங்கதி
### புங்குடுதீவு

கடந்த 45வருடங்களாகப் புங்குடுதீவு அர்ச். பிரான்சீஸ்சவேரியார் கோவில் சக்கிறிஸ்தாமாகக் கடமையாற்றிவந்த திரு. சவுரிகேல் தாவீதுஎன்பவர் அண்மையில் காலமாயினார். இவர் தமதுகடமைகளைச் சமுத்திரையாக நிறைவேற்றிக் குருமாருடையவும், மற்றோருடையவும் மதிப்பையும் அன்பையும் பெற்றிருந்தார். இவரைஇழந்துதுயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப் படுகின்றோம்.

## கல்முனைவட்டார மரியாயின்சபைகளின் பொதுச்சபை
# வருடாந்தக் கூட்டம்

மேற்படிகூட்டம் கல்முனை திருஇருதயவாசிகசாலைமண்டபத்தில் 19.1.64 ஞாயிறு பி.ப. 3மணிக்கு தலைவர் திரு. செ. வயந்தாசபிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் தலைமையில் மந்திரமாலைச் செபித்தலுடன் ஆரம்பமானது.

அத்தருணம் நடத்தை, சுவாமிகளும், கல்முனைப்பங்குக் கட்டளைக்குருவருமான வண. எவ். எம். செலர் சுவாமியவர்களும், அக்கரைப்பற்றுப் பங்குக் கட்டளைக்குரவர் வண. ஹொட்விறிகுக் சுவாமியவர்களும், சங். ஞானத்தாய்மார்கள் இருவரும், அக்கரைப்பற்று, கல்முனை, கல்லாற்றுப் பங்குகளிலுள்ள மரியாயின்சபை அங்கத்தவர்கள் 60பேரும் சமுகமளித்தார்கள். அத்தருணம் கௌரவ காரியதரிசி செல்வன் த. அமலதாஸ் அவர்களால் சென்றவருடாந்த பொதுக்கூட்ட அறிக்கையும், தலைவர் அவர்களால் ஆண்டுஅறிக்கையும், கௌரவ தனாதிகாரிஅவர்களால் கணக்கறிக்கையும், ஒன்பது சபைகளின் கௌரவ காரியதரிசிகளால் அவரவர்கள் சபைகளின் வருடாந்த அறிக்கைகளும் வாசிக்கப்பட்டன.

நடத்தை, சுவாமியவர்கள் இப்புததாண்டில் இன்னும் அதிகஞானக் கிருத்தியங்களில் ஈடுபட்டுச் சபைகளின் வளர்ச்சிக்காக அனைவரும் பாடுபடவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அக்கரைப்பற்றுப் பங்குக்குரவர் வண. பிதா ஹொட்விறிகுக் அவர்கள் அக்கரைப்பற்றுப் பங்குச்சபை அண்மையில் ஆரம்பித்துள்ள மனந்திருப்புதற்சபையில் மரியாயின்சபையினர் அங்கத்துவம்பெற்று அப்போஸ்தொலிக்க தொண்டுசெய்து, பிறசமயவர்களை மனந்திருப்பச் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டார்கள். தலைவர்: திரு. செ. வயந்தராசபிள்ளை; உபதலைவர்: செல்வன் சி. செலரன்றூகல்; காரியதரிசி: செல்வன் த. அமலதாஸ்; தனாதிகாரி: செல்வி செல்வராணி பொடிசிங்கோ; ஆலோசகர்: திருமதி செபமாலைமேரி சூசைப்பிள்ளை.

சிற்றுண்டி, தேநீர் வழங்கப்பட்டதுடன் கூட்டம் செபத்துடன் இனிது முடிவுற்றது.

✝

## 1-ம்வருட மரணஞாபகம்

"என்னுடையசீவியம் மின்னலைப்போல்
தோன்றி மறைந்தது.
என்சீவியத்தில்
என்னை நேசித்தவர்களே
என்மரணத்திலும் என்னைமறவாதீர்கள்"

| பிறப்பு : | இறப்பு : |
| --- | --- |
| 1911 | 10-2-1963 |

"மதுரயேசுவே! நித்தியஇளைப்பாற்றியைச் சவரி மரியான்சேவியர் அவர்களுக்கு அளித்தருளும் சுவாமி; முடிவில்லாத ஒளி இவருக்குப் பிரகாசிக்கக்கடவது." (1பா. 1பிரி. 1திரி.)

எனது அன்புமிக்க பத்தாவும், எங்கள் நேசத் தந்தையுமான எஸ். எம். சேவியர் (முன்னாள் இலங்கை வானொலி புல்லாங்குழல் வித்துவான்) அவர்கள் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு அமலன் பதம் சென்றடைந்த முதல்வருட நினைவுதினம் இம்மாதம் 10-ந்திகதி பூர்த்தியான்றபடியால் (10-2-64) திங்கட்கிழமை காலை 6-15மணிக்குக் கொள்ளுப்பிட்டி, அர்ச். அந்தோனியார் தேவாலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங் சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், இனசனர், நண்பர்கள் யாபேரும் தங்கள்செபங்களில் இவரை நினைவுகூரும்படி வேண்டுகிறோம்.

பத்தாவைஇழந்து துயருறும் :
பாப்பு வெரோணிக்காவும், மக்களும்.

நம். 23, கெல்ஸன்லேன்,
கொள்ளுப்பிட்டி.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திவ்விய கர்த்தரின் இரக்கத்தினாலும் மருதமடு செபமாலைமாதா, அர்ச். சவேரியார் இவர்களது இடைவிடா வேண்டுதலாலும் எனக்குவந்த வாதநோய் வெகு விரைவில் குணமானது. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

யோ. சேவியர் நவரத்தினராசா
முருங்கன்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது மனைவிக்குவந்த கடுமையான வியாதி குணமாகும்படி குழந்தையேசுவின் சின்னத் திரேசம்மாளிடம் இரந்து மன்றாடியதின்பயனாகச் சுகம்கிடைத்தது. நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கிறேன்.

ஜே. எஸ்.

## யேசுவின் திருஇருதயசபைக் கூட்டம்

யேசுவின் திருஇருதயசபையின் மாதாந்தக்கூட்டம் வருகிறஞாயிற்றுக்கிழமை (மாசி9-ந்திகதி) பிற்பகல் 5-30 மணிக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் சபைமண்டபத்தில் நடைபெறும். அக்கூட்டத்தில் தற்காலத்தின் கோலங்கள் எனும் விஷயத்தைப்பற்றி திரு. ஆர். செல்லத்துரை அவர்களால் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்படும்.

யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். பதுவை அந்தோனியாரிடம் நான்கேட்ட மன்றாட்டு அனுகூலமானது. அவருக்கு எனது நன்றியைச் செலுத்துகிறேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரப்படுத்துகிறேன்.

ம. திரேசம்மா (குணமணி)

சின்னத்தங்காடு,
முல்லைத்தீவு.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், பரி சதாசகாயமாதாவின் மன்றாட்டினாலும், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். செபஸ்தியார், அர்ச். அந்தோனியார் இவர்களின் வேண்டுதலினாலும் எனது மனைவிக்குச் சடுதியாகஏற்பட்ட வியாதி குணமானதினால், நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமம் எங்கும் புகழப்படுவதாக.

ஜே. எஸ்.

## பேசும் பேனா

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

என்ற பெயரால் நல்லசமாரித்தர்கள் பலர் ஒருசபையாகத்திரண்டு இந்த நிர்ப்பாக்கிய குடும்பங்கட்கு வாழ்வழிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதையும், இதற்குப்பின்னணியாகச் சில துறவிகள் இயங்கிவருவதையும் The Little Ones என்ற அப்புஸ்தகம்கூறுகிறது. BROTHER DIRECTOR, ST. JOSEPH'S NOVITIATE, MUTUWAL என்ற முகவரியில் இப்புஸ்தகத்தையும், இந்த நல்ல சமாரித்தர்கள்பற்றிய முழு விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடித்த கையே அணைத்தது

அந்தத் துண்டுப்பத்திரத்தில் கைவைக்கப்போய்த் தமது கரங்கள்இரண்டிலும் ஒன்றின்பின்ஒன்றாய் மளாரென இரண்டு அடிகள் விழுந்ததே மாக்ஸ் சுவாமியார் அதிகம் வேதனை அடைந்தவராய் வேகமாகக் கைகளை எடுத்துவிட்டுச் செய்வதறியாது திகைத்தார், மலைத்தார். சிந்தைகலங்கினார். கடல் அலைகள்போல அவர்மனதிலே எண்ண அலைகள் குமுறத்தொடங்கின.

அச்சந்தருவதும், அச்சுறுத்துவதுமான இந்த விபரீதநிகழ்ச்சி சுவாமியாருக்குத் தருமசங்கடமான ஒருநிலையைக் கொணர்ந்தது. ஒருதரம் அவர் தலை சுழன்றது. நிலைதழன்றது. சிந்தனை கலைந்தது. அமைதியாகச் சிறிதுவேளை ஆழ்ந்து யோசித்ததிலிருந்து, அந்த இரண்டுஅடிகளும் உண்டுபண்ணிய சங்கடமானநிலையின் காரணத்தை அடித்தளம்வரைசென்று கண்டறியத்தான் வேண்டுமென்ற ஒருதீர்மானத்துக்கு அவரை வரச்செய்தது. ஆனால், எவ்விதம் கண்டறிவது? அதற்கு யாது சூழ்ச்சியைக் கையாளலாமெனச் சிலகணநேரம் ஆலோசித்தபோது, அப்பத்திரத்திலே கையைவைத்ததல்ல ஆனால், வைத்தபின் அதைஎடுத்ததே தவறெனக் கண்டுணர்ந்தார். ஆகவே, என்னநேர்ந்தாலும் நேரட்டும்; வைத்த கையை இனிமேல் எந்தவிதத்திலும் எடுப்பதேயில்லையென்ற தீர்க்கமான ஒரு தீர்மானத்துக்கு வந்தார். தமக்கு அதிகம் தைரியத்தை அருளுமாறு தூயஆவியானவரைஇரந்து ஒருசிறு செபஞ்செய்தார். பின்னர் அதிகம் மனோதைரியத்துடன் மடித்திருந்த அந்தத் துண்டுப்பத்திரத்தை எடுக்கத் தமதுகையை வைத்தார். வைத்த கணமே அவர்கையில் மூன்றாவதுஅடி முன்னிலும் அதிகம்பலமாக விழுந்தது. அஃது சக்தியலால்விழுந்த ஓர்அடியேபோன்று அத்தனை பெரும வேதனையைத் தமக்கு உண்டுபண்ணுவதாக அவர் உணர்ந்தார்.

ஆனால், அவர் இம்முறை தமக்குற்ற தாங்கமுடியாத வேதனையை ஒருவாறு தாங்கிக்கொண்டு அத்துண்டுப்பத்திரத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்வதிலே வெற்றிகண்டார். ஆனால், என்ன அதிசயம்! பிரச்சினைஒன்று புதிதாக எழுந்து அவரைத் திணறவைத்தது. அவர் ஒன்றை நினைத்துச்செய்யக் கருமம் மற்றொன்றாயது. அதாவது கெட்டியாகப் பிடித்துக்கொண்ட அவரின்கரத்தைப் பின்னர்தூக்கி எடுத்துக்கொள்ளவியலாது, அங்கிங்கு பெயர்த்துக் கொள்ளமுடியாது அந்தரங்க சக்தி ஒன்று அழுங்குப்பிடியாய் அதனை அழுந்தப் பிடித்துக்கொண்டது. என்றாலும் மனத்தைரியத்தோடும், அதிக சாவதானத்தோடும் நிலைமையை எதிர்கொண்டார். கரத்தின்பக்கமாய்த் தமது கண்களைத் திருப்பினார். அவர் பார்வை அதில்சென்றதும் அத்துணை கடுமையாகத் தமதுகையை அடித்துத் தாக்கியது ஒருமனிதகரமே என்பதைப் பிரமிப்புடன் அவதானித்தார். அத்துடன் ஒருமனிதசீவனின் பெருமூச்சும் அவர்செவிகளில் விழுந்தது. அந்த மனிதர் வயதுசென்ற ஒருவரென மட்டிட்டுக்கொண்டு தமதுசிரசைப் பதமையாய்ப் பின்புறமாகத்திருப்பிக் கடைக்கண்ணால் நோக்கியபோது, தமக்குப் பின்னால் ஒரு மனிதஉருவம் நிற்பது அவர்கண்களுக்குத் தென்பட்டது. அதனால் தமக்குப் பின்புறமாக நிற்பவரைக் கண்டுகொள்ளுமாறு தாமும் பின்புறமாகத் திரும்பியபோது, ஏறக்குறைய 80வயதுடையவரென மதிப்பிடத்தகுந்த ஒருவிருத்தாப்பியர் அங்கே நிற்கக்கண்டார். மரணவேதனையை அவர்வதனம் பிரதிபலித்தது. இன்னும் சுவாமியார் தமக்கு மிகுந்த அச்சத்தையும், ஆச்சரியத்தையும்தந்த மற்றொன்றையும் காணக்கூடியவரானார். அதாவது அந்தவிருத்தாப்பிய மனிதர் ஒரு குருவானவராக இருந்தமைதான். அவரின் குருத்துவ அங்கியிலிருந்தே இதனை அறிந்துகொள்ளக் கூடியதாய் இருந்தது.

சுவாமியார் சிலவினாடிகள் மௌனமாகநின்று அவரை மேலும்கீழுமாகக் கூர்ந்து அவதானித்தார். அவர்மனதில் பலவிதநினைவுகள் அலைமோதின. கடைசியாகத் தமது உணர்ச்சிப் பிரவாகத்தை அடக்கிக்கொண்டபோது, இடையிலேநிலவிய நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு அவர்வாயிலிருந்து கணீரென ஒலித்தகுரலிலே வினாக்களாகச் சில வார்த்தைகள் வெளிவந்தன. "நீங்கள் யார்? உங்களுடைய பெயர்என்ன? உங்களுக்கு வேண்டியது என்ன?"

அப்பொழுது அங்கு காட்சியளித்த குருவானவர் தமதுகுரலில் வருத்தம் தொனிக்க, உடனடியாகத்தானே பின்வருமாறு பதிலளித்தார். "நான் ஒரு குருவானவர். எனதுபெயர் ஜோர்ஜ் சுவாமியார். இற்றைக்கு 120வருடங்களுக்குமுன் இந்தக்கோவில் பங்குக் குருவாக நான் இருந்தேன். இப்போது உம்மிடமிருந்து எனக்குவேண்டியதெல்லாம், நீர்பிடித்துக்கொண்டிருக்கும் மடித்த துண்டுப்பத்திரத்தைத் துண்டுதுண்டாகக்கிழித்து முற்றாக எரித்துவிட வேண்டியதே."

மாக்ஸ்சுவாமியார் இதைக்கேட்டதே ஆச்சரியவசத்தராய்த் தமதுகண்களை ஒருகால் அகலவிரிக்கின்றார். வைத்தவிழி வாங்காமல் அவரைச் சிறிதுவேளை ஆர்வத்துடன் பார்க்கின்றார். எதனையோ நினைத்தவர்போல் உணர்ச்சிவசப் படுகின்றார். இன்னும் எதையோ அவரிடம்வினவி அறிந்துகொள்ள அவர்உதடுகள் துடிக்கின்றன. "ஆனால், விடைகிடைக்குமா? ஆம், அவர்கேட்டது ஓர்இலகுவான அலுவல்; எவருமே அதைஎளிதில் செய்துவிடலாம்; ஆனால், மடித்திருக்கும் இத்துண்டுப் பத்திரத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளுமாறு அவர் இப்படியெல்லாம் அங்கலாய்க்கும்படியாக அதிலுள்ள இரகசியம் யாதாய் இருக்கலாம்? அவர் கேட்டுக்கொண்டதைச் செய்யத்தொடங்குமுன் அதை ஒருதரம் கேட்டு அறிந்துகொள்ளத்தான் வேண்டும்" என்று மனதிலே தைரியத்தை வருவித்துக்கொண்டு, "சுவாமி, தாங்கள் கேட்டுக்கொண்டபடிசெய்வது எனக்குப் பரமசந்தோஷம்; ஆனால், அவ்வாறு செய்யுமுன் இன்னுமொருகேள்வி தங்களிடம் கேட்கலாமா?"

"மகனே, நன்றாய்க் கேட்கலாம்."

"இந்தத் துண்டுப் பத்திரத்தில் அடங்கியுள்ள இரகசியம் என்னவென்று தயவுசெய்து எனக்குத் தெரிவிப்பீர்களா?"

அப்பொழுது அந்த வயோதிபகுருவர் ஒருநீண்ட பெருமூச்சு எறிந்துவிட்டு, "மகனே, உம்முடைய வயதுள்ள ஒருகுருவாக நான்இருக்கையில் ஒருசீமாட்டி பாவசங்கீர்த்தனம் செய்யவென்று என்னிடம் வந்தாள்; இந்தச் சீமாட்டி வாய்பேசஅறியாத ஓர் ஊமை; அதனால்அவள் தனது பாவங்களை இப்பொழுது நீர் பிடித்துக்கொண்டிருக்கிற துண்டுப்பத்திரத்தில் எழுதித்தந்தாள்; நானும் அவளுக்குப் பாவப்பொறுத்தல் அளித்தேன்; ஆனால், எனதுஅசட்டைத்தனத்தாலே இதனைச் சுட்டெரிக்க மறந்துபோய் இப்புத்தகத்துள் அலட்சியமாக வைத்துவிட்டேன்; 1840-ம்ஆண்டு நான் மாணித்தேன்; அதுமுதல் இந்தப் [illegible] றுன செயலுக்காக நான் உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பது மட்டுமல்ல, எவரும் இதனைத் திறந்துபார்க்கத் தணியாவண்ணம் இதைக் காவல்பண்ணிக்கொண்டுமிருக்கிறேன்; ஆனபடியால்தான் இங்கு நான் இருந்துவருகிறேன்; தயவுசெய்து இந்தப்பெரும்உதவியை எனக்குச் செய்யமாட்டீரா?"

அப்பொழுது மாக்ஸ்சுவாமியார் அத்துண்டுப்பத்திரத்தை வெளியே எடுத்து அழித்துவிடத் தக்கதாகத் தமதுகையை அழுந்தப்பிடித்திருக்கும் அவருடையகையை எடுத்துவிடுமாறு அவரை வேண்டினார். அவரும் அவ்வாறுசெய்தார். ஆயினும் இடம்பெயராது இன்னுமே அவர்பக்கத்தில் நின்றார். சுவாமியார் தம்மால் இயன்ற மட்டும் அப்பத்திரத்தை எத்தனை சிறு துண்டுகளாகக் கிழிக்கமுடியுமோ அத்தனை சிறுதுண்டுகளாகக் கிழித்தார். பின்னர் அத்துண்டுகளை ஒருகுவியலாகச் சேர்த்துத் தீப்பெட்டியை எடுத்துத்தட்டி அதனைச் சுட்டெரித்தார். அந்தக் குவியல்முழுவதும் எரிந்துசாம்பராகிறவரை முந்தியகுருவரும் காத்துநின்று அதைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அதன்மேல் தம்முடையவேலையில் அவர் திருப்தியடைந்துள்ளாரோவென்று அறிந்துகொள்ளுமாறு அவரைச் சிறுபுன்முறுவலுடன் சுவாமியார் நோக்கினார். சந்தேகமற அவர் திருப்தியடைந்தவர்போல் மாத்திரமல்ல, மகாசந்தோஷம் அடைந்தவர்போலும் காணப்பட்டார், அவர்வதனம் மலர்ச்சிகாட்டிப் பிரகாசமான புன்னகை பூத்தது. ஆனந்த மேலீட்டால் அவர்விழிகள் பளபளத்துப் பிரபை வீசிக் கொண்டிருக்க, தமது பேருபகாரியான சுவாமியாரை நன்றிகலந்த பார்வையுடன் ஒருகால்விழித்து, தாம் மும்முறைஅடித்த அவர்கைகளை அன்புபெருக வாரியணைத்து மும்முறை அவற்றிற்கு முத்தங்கள்கொடுத்து, "மாக்ஸ் சுவாமிகளே, செய்யாமற்செய்த இந்தப்பேருதவிக்காகத் தமக்குப் பெரிய உபகாரம்; தமக்காக நான் எப்போதும் மன்றாடிவருவேன்" என்ற மனப்பூர்வமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு அதரிசனமாயினார். மாக்ஸ் சுவாமியார் தமது சட்டைப்பையிலிருந்து ஒரு கைக்குட்டையை வெளியே எடுத்து, வியர்வைசிந்திய தமது முகத்தைத் துடைத்துவிட்டு ஏதோ மோட்சானந்த காட்சிஒன்றைக் கண்டவர்போல மெய்மறந்து பரவசத்தில் ஆழ்ந்தார்.

வணக்கம்.

(கிறிஸ்தவ குரல்" எனும் சஞ்சிகையிலே ஆங்கிலத்தில்கண்ட ஒரு சம்பவத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதியது)

# பேசும் பேனா

**தாமோனும் பிதியசும் :**

நட்புறவுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது தாமோனும் பிதியசும் கதை. சிறு பராயத்தில் வாசினைப் பாடத்தில் இரண்டு பிராண சிநேகிதர்கள் என்ற பாடத்தை நேயர்கள் கற்றிருப்பார்கள், அக்கதையை பிரபல எம். ஜி. எம். நிறுவனத்தார் அழகியதோர்திரைப்படமாக உருவாக்கியுள்ளார்கள். மூலக்கதைக்கும் திரைக்கதைக்குமிடையே சிறு வித்தியாசமிருப்பினும் இரு பிராண சிநேகிதர்களின் நட்புறவு என்ற கொள்கைக்கும், திரைப்படத்தின் வெற்றிக்கும் அவ்வித்தியாசம் இடையூறாகவில்லை. குறைமை மிகுந்த ஈஸ்ட்மன் வர்ணத்தில் படம் தயாரிக்கப் பட்டுள்ளது. தற்போது கொழும்பு, மஜெஸ்டிக் படமாளிகையில் காட்டப்படும் தாமோனும் பிதியசும் விரைவில் யாழ்ப்பாணத்திலும், மற்றுமிடங்களிலும் திரையிடப்படவிருக்கிறது.

**பாப்புவின் சுற்றுலா :**

பாப்பரசர் ஆறாவது சின்னப்பரின் சுற்றுலாவை பததிரிகைகளும் வானொலிகளும் போட்டி போட்டுக்கொண்டு வர்ணித்த காலம்போய் திரைப்படங்கள் அப்புனித யாத்திரையை வெளியிடும் காலம் வந்துவிட்டது. தற்போது கொழும்பிலுள்ள பலதிரைப்படமாளிகைகள் பாப்புவின் சுற்றுலா பற்றிய செய்திச்சுருள்களை வெளியிடத் தொடங்கியுள்ளன. றோமைமக்கள் பாப்பரசருக்களித்த பிரியாவிடை, அம்மான் விமான தளத்தில் ஜோர்தான் மன்னரின் வரவேற்பு, இஸ்ரவேல் ஜனாதிபதியின் வரவேற்பு, அத்தனகோரஸ் பத்திறியாக்குடன் கலந்துரையாடல், சிலுவைப்பாதை, நசரேத் விஜயம், பெத்லகேமில் திவ்வியபூசை அனைத்தும் இச்செய்திகளில் இடம் பெற்றுள்ளன. எனினும் பாப்பரசர் சுற்றுலாபற்றிய முழுநீள வர்ணப்படம் இன்னும் இலங்கைக்கு வரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**47 வருடங்களின்பின் :**

கொழும்பில் கல்லூரிகளிடையே கிரிக்கட் விளையாட்டுப்போட்டிகள் ஆரம்பமாய்விட்டன. ஒருசில மடையர்கள் நாள்முழுதும் ஆடுவதை ஓராயிரம் மடையர்கள் பார்த்துமகிழுவதுதான் கிரிக்கட் ஆட்டம் என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி. இந்த கிரிக்கட் ஆட்டம் இன்று உலகம் முழுவதும் பரவியுள்ளதோர் சர்வதேசவிளையாட்டாகத் திகழ்கிறது. கடந்தவாரஇறுதியில் இலங்கையின் மிகப்பெரிய கத்தோலிக்க நிறுவனமான சென். யோசவ் கல்லூரியை, மற்றொரு கத்தோலிக்க நிறுவனமான சென். பெனடிக்ற் கல்லூரி கிரிக்கட் ஆட்டத்தில் தோற்கடித்தது. இந்த வெற்றி பெனடிக்ற் கல்லூரிக்கு மிகப்பெரியதோர் வெற்றி. கடந்த 47 வருடங்களாக சென். யோசவ் கல்லூரியுடன் ஆடிய ஆட்டங்களிலெல்லாம் அவர்கள் தோல்வியே கண்டனர். இவ்வெற்றியை கிரிக்கட் ரசிகர்களும் பத்திரிகைகளும் வெகுவாக வரவேற்றுள்ளன.

**தீபம் :**

கொழும்பு அலோசியஸ் குருத்துவ பயிற்சிக் கழகத்தினரின் வருடாந்த வெளியீடான "தீபம்" என்ற சஞ்சிகையின் பிரதியொன்று பேசும்பேனாவுக்கு கிடைத்துள்ளது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பலஅரிய கட்டுரைகள் தீபத்தில் சுடர்விடுகின்றன. வருங்கால இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் அணிகலன்களாக விளங்கப்போகும் குருத்துவமணிகளின் பயிற்சியையும் வளர்ச்சியையும்பற்றிய செய்திகளை தீபத்தில் படிக்க எம்மனம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது. அன்னாரின் வெளியீடு பத்திரிகைக்கலையிலும் அவர்கள் வல்லுநர்கள் என்பதை நிரூபித்திருக்கிறது.

**கொழும்பு வடக்கில் :**

கொழும்பு வடக்கில் ஏராளமான சேரிகள் உண்டு. இச்சேரிகளின் வதியும் ஏழைக்குடும்பங்கள்பற்றி நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? யான்கூட கடந்தவாரம்வரை அதுபற்றி அறியவில்லை. ஆம் கடந்தவாரம் எனது நண்பரான குரவர் ஒருவர் ஒருபுஸ்தகத்தை என்னிடம் தந்து இதையும் வாசித்துப்பாரும் என்றார். புஸ்தகம் முழுவதையும் மேலெழுந்தவாரியாக புரட்டியபோது அந்தச்சேரிகளில் வசிக்கும் குடும்பங்களின் வேதனை மிகுந்தவாழ்க்கை, புகைப்படங்களாக என்மனதில் உறுத்தியதைக் கண்டேன். அவர்களின் வருமானம், சிக்கனமான பற்றாக்குறையான வாழ்க்கைக்கே போதாமலிருப்பதையும் அறிந்தேன். வெஜீனுருண்டு

(தொடர்ச்சி 2-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**மாசி மாதம் — 1964.**

| | | | |
|---|---|---|---|
| 9 | ஞா. | பஞ்சிகை ஞாயிறு | [ஊ] |
| 10 | தி. | அர்ச். ஸ்கொலஸ்திக்கம்மாள் | [வெ] |
| 11 | செ. | அர்ச். லூர்துமாதா திருநாள் | [வெ] |
| 12 | பு. | ஆசிநீறு தரிக்கும்தினம் | [ஊ] |
| 13 | வி. | காலதினம் | [ஊ] |
| 14 | வெ. | காலதினம் | [ஊ] |
| 15 | ச. | காலதினம் | [ஊ] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு மாசி மாதம் 8-ந் திகதி**


## ஒரு வாஞ்சையுள்ள அன்னை

தமது இரட்சணியப்பலியின் உச்சவேளை நெருங்கிக்கொண்டிருந்தபோது, மூன்ருணிகளில் அகோர வேதனை அனுபவித்துக் கொண்டிருந்த தருணம், தேவகுமாரனுக்குப் பூவுலகோரைப்பற்றியே எண்ணம்.

அவர்களைப் பராமரிக்க ஒருவர் வேண்டும்; அப்பராமரிப்பாளர் சிறந்தவோர் தாயாக மனுக்குலத்தோருக்கு விளங்கவேண்டுமென்பது அவருடைய ஆவல்.

எனவே தம்பிரிய அன்னையை பூவுலகோரைப் பராமரிப்பவளாக, பாதுகாவலியாக, அவர்களின் அன்னையாக நியமித்தருளினுர்.

மரியன்னை தமது மகத்தான இப்பணியைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டாள். தமது காட்சிகளின்மூலம் தம் தாய்மையின் முக்கியத்துவத்தை அறிவுறுத்திவருகின்ருள்.

கடந்த ஒன்றரை நூற்ருண்டு காலத்தில், ஏழுதலங்களில் மரியன்னை காட்சிதந்துள்ளாள்.

1830. கதரின் லபோரின் என்ற நங்கை தேவ அன்னையைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ருள். புதுமை வரவணிக்கத்துடன், புவியோரின் பாவாக்கிரமங்கள்பற்றி அறிவுரையும்தர அன்னைமறக்கவில்லை.

பதினுறு வருடங்களின்பின் லா சலேத் நகரில் சிறுவர் இருவர் மாமரியைக் கண்டனர். தம் புதல்வரின் கட்டளைகளைப் புறக்கணித்த மாந்தர்பற்றி துயருடன் முறையிட்டாள் மாமரியாள்.

1858. ஈழைநோயால் வருந்திய ஏழைச்சிறுமி லூர்துபதியில் அன்னையின் தரிசனம் பெற்ருள். போதனையுடன் சாதனைகளும் தந்து தான் மனுக்குலத்தின் அரசி என்பதையும் மரியன்னை நிரூபித்தாள்.

இத்தாலி, பெல்ஜியம், அயர்லாந்து நாடுகளிலும் அன்னையின் தரிசனமும் அறிவுரைகளும் தரப்பட்டன.

1917. ருஷியாவில் பொதுவுடைமை வெற்றியீட்டியவேளை. மதம் என்பது ஒருமாய்கை, இறைவனிடம் நம்மை அடிமையாக்கும் ஒரு சாதனம் என லெனின் பிரகடனம் செய்ததருணம்.

பத்திமாபதியில் பாலர் மூவருக்குக் காட்சிதந்தாள் பரம அன்னை. மகத்தான புதுமைகள்மூலம் தம் வருகையையும் நிரூபித்தாள்.

இத்தரிசனங்களிலெல்லாம் அன்னை கூறியவை யாவை?

செபம், தபம், பாவப்பரிகாரம், செபமாலை, மாசற்ற இருதயப் பக்தி.

தேவ அன்னை புவியோரின் இரட்சணியத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளாள்.

ஆன்மதாகம் நிரம்பிய அந்த அன்னை தம் தரிசனங்களில் அதற்கான வழிவகைகளையெல்லாம் சுட்டிக்காட்டிவருகிருள்.

ம்மில் வாஞ்சைநிரம்பிய அந்த ன்னை ஒரு நூற்ருண்டின் முன் லூர்துபதியில் தரிசனம் தந்த தினம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. தபசுகாலமும் ஆரம்பமாகிறது.

லூர்துபதியில் அன்னைதந்த அறிவுரைகளை இத்தருணத்தில் சிந்திப்போம். எமது ஆன்ம நிலையையும் பரிசீலனை செய்வோம். அன்னையின் விருப்புக்கிணங்கச் செயலாற்றுவோம்.

# புழுதியையும் சாம்பலையும் நினைவுகூர வேண்டுமா?

தாய்க்குத் தன் பிள்ளையின் குணங்கள், நாட்டங்கள் தெரிவதுபோல் வேறு எவருக்கும் தெரியுமோ என்பது சந்தேகமே. நம் பரிசுத்த தாயாகிய திருச்சபையும் தன் பிள்ளைகளின் குணங்களையும், தன்மைகளையும் நன்குணர்ந்திருக்கின்ருள். பக்தியும், சுறுசுறுப்பும் ஒரு சமயமும், அசதியும், அசட்டையும் மறுசமயமும் கொண்டவர்கள் தன் பிள்ளைகள் என்பதை அவள் அறிவாள். ஆகவே அவர்களை ஒரு நிலையான வழியில் நடத்தி ஈற்றில் அவர்களை அவர்களின் தந்தையின் பாதங்களில் சேர்க்கும் அன்னை அவள்.

சற்றுமுன் நடந்தேறிய நத்தார்ப் பண்டிகையின்போது அவள் தன்பிள்ளைகளைப்பார்த்து, "இதோ உங்களுக்கு நற்செய்திகளைக் கொண்டுவருகிறேன் சந்தோஷப்படுங்கள்! இவ்வுன்னத இன்பத்தில் பங்குபற்றுங்கள்" என்றவள், இப்பொழுதோவென்ருல் பாஸ்காப் பண்டிகை கிட்டிவருகையில், "மகனே, உன் நிமிர்ந்த நடையையும் உன் தற்பெருமைகொண்ட சிரத்தையும் தாழ்த்தி, உன் பாவங்களுக்குப் பரிகாரமாகத் தாழ்ச்சியின் சின்னமான சாம்பலை உன் நெற்றியில் வாங்கிக் கொள். மனிதா, நீ மண்ணுய் இருக்கிருய் மீண்டும் மண்ணுவாய்" என்று எச்சரிக்கின்ருள்.

திருச்சபையின் தொடக்கத்தில் இக்காலம் ஒரு சாதாரண பக்திக் கிருத்தியமாக மாத்திரமிருக்காமல், உண்மையில் ஒரு தவக்கிருத்தியமாகவே இருந்தது. அழகிற்கும் ஆடம்பரத்திற்கும் ஆதாரமாக இருந்த தலைமுடி வாரப்படாமல், எண்ணெயிடப்படாமல் அலங்கோலமாய்த் தொங்கவிடப்பட்டிருக்கும். அதில் புழுதியும் சாம்பலும் அள்ளி அப்பப்பட்டிருக்கும். அழகிய உடைகளும், அலங்கார ஆபரணங்களும், பெட்டியில் படுக்க, அழகற்ற உடைகளும், பக்குவமாய்த் தைக்கப்படாத சீலைகளும் இடையிற் தொங்கும். இதன்பின் அவர்கள் உண்மையான ஒறுத்தலில் ஈடுபட்டுத் தங்கள் உடல்களை உள்ளத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருவார்கள்.

இன்றைய நமக்கு இதையெல்லாம் செய்வதற்குவேண்டிய உடற்திடகாத்திரமும், உள்ளத்தைரியமும் குறைவே. இருந்தும் தவம் செய்யவேண்டியது அவசியம். "நீங்கள் தவம் செய்யாவிட்டால் நிச்சயம் நாசமாவீர்கள்" என்கிருர் கிறீஸ்து. இந்த நாற்பது நாட்களில் மாத்திரமாகுதல் எங்கள் ஆடம்பரங்களையும், கொண்டாட்டங்களையும் மறந்து, "மனிதா, நீ மண்ணுய் இருக்கிருய், மீண்டும் மண்ணுவாய்," என்னும் வாக்கியத்தின் உண்மையை உணருதல் வேண்டும். இல்லையென்ருல் நாம் காரியங்களின் முக்கியத்துவத்தை மறந்து சரீரத்திற்கும், இவ்வுலக வாழ்க்கைக்கும் வேண்டுவனவற்றைத் தேடுவதில் எங்கள் வாழ் நாட்களை வீண் நாட்களாக்கி விடுவோம்.

மேலும் எங்கள் பாவத்தின் நிமித்தம் இந்த உண்மையை உணரல் வேண்டும். மனிதனை மண்ணுல் உண்டாக்கிய கடவுள் அவன் மீண்டும் மண்ணுக வேணடும் என்று ஆசிக்கவில்லை. அவன் என்றும் உயிருடன் இன்புற்றிருக்க வேண்டும் என்று ஆசித்தார். ஆகவே, அவ்வுடலுக்கு அதன் சுபாவத்திற்கும் மேலானதொரு கொடையைக் கொடுத்தார்— சாவில் நின்றும் நிவர்த்தி. முதல் மனிதன் இக்கொடையைத் தன் பிள்ளைகளுக்கும் கொடுக்கவேண்டும் என்பது ஏற்பாடு. இந்த ஏற்பாட்டின்படி மனிதன் நடந்தானு? அதுதான் இல்லை. ஆதாம், சரித்திரத்தின் முதன் மனிதன். தன் பாவத்தின்காரணமாய் இக்கொடையைத் தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் இல்லதாக்கக் கங்கணம் கட்டிக்கொண்டான். முடிவு, அவனுக்கும் அவன் சந்ததியாராகிய நமக்கும் வந்தது சாவு. விபூதித் திருநாளில் நாங்கள் கேட்கும், "மனிதா நீ மண்ணுயிருக்கிருய், மீண்டும் மண்ணுவாய்", என்னும் வார்த்தைகள் ஆதாமின் பாவத்தின் நிமித்தம் சருவேசுரன் அவனுக்கும் அவன் பிள்ளைகளாகிய நமக்குமிட்ட சாபமே.

இருந்தும் நாங்கள் சாவிற்கு அஞ்சவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் நாம் எல்லோரும் யேசுவின் சாவினுல் இரட்சிக்கப் பட்டவர்கள். அவருடைய திருஇரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டவர்கள். எவனெருவன் பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டுப் பரிகாரம் செய்கிருனே, அவன் சாவின்நாளை ஆவலுடன் வரவேற்பான். ஏனெனில், அவன் மகிமையடையும் நாளும், உத்தானமாகிய கிறீஸ்துவுடன் ஒன்றுகூடி உன்னத பேரின்ப பாக்கியத்தை அனுபவிக்கும் பேரின்ப நாளும் அந்நாளே. ஆகவே எங்கள் பாவங்களுக்குப் பரிகாரம்தேடி அந்த நாள் என்று வருமோ என்று எதிர்பார்த்திருப்போமாக.

தி. ருகல்—கண்டி.

## தொழுநோயாளரின் உண்ணுவிரதம்

கன்னியாஸ்திரி தாதிமார்களின் சேவை தொடர்ந்து தங்களுக்குத் தேவையென்று தெரிவித்துச் சுமார் மூன்னூறு தொழு(குஷ்ட)நோயாளர்கள் ஹெந்தலைத் தொழுநோயாளர் ஆஸ்பத்திரியிலே உண்ணுவிரதமிருந்து வருகின்ருர்கள். இந்த ஆஸ்பத்திரியில் சேவைசெய்துவருகின்ற கன்னியாஸ்திரி தாதிமார்களின் சேவைகாலத்தை மேலும்நீடிக்குமாறு வேண்டியே தமிழர், முஸ்லீம்கள், சிங்களவராகிய மூன்று இனத்தவரையும் சேர்ந்த தொழுநோயாளர்கள் உண்ணுவிரதமிருக்கிருர்கள். இந்தத்தாதிமார்களின் சேவைகாலத்தை வருகிறபங்குனிமாதத்துடன் முடித்துக்கொள்ள அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

## பதினுருவது சுதந்திரதினம்

இலங்கையின் 16-வது சுதந்திர தினம் சென்ற 4-ந்திகதி செவ்வாய்க் கிழமை வந்துபோயிற்று. யாழ்ப்பாணத்திலே சுதந்திரதின வைபவம் எதுவும் நடைபெறவில்லை. கச்சேரியிலும், யாழ்ப்பாணப்பெருந்தெருவிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச்சபைக் காரியாலயத்திலும், பொலிஸ்நிலையத்திலும், பிஸ்கால்கந்தோரிலும் சிங்கக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வடகிழ்மாகாணங்களின் பல்வேறுபகுதிகளிலும் சுதந்திரதினம் துக்கதினமாகக் கொண்டாடப்பட்டது. இவ்விருபகுதிகளிலும் அரசாங்கம் எந்தவிதமான கொண்டாட்டத்தையும் ஒழுங்குசெய்து நடத்தவில்லை.

### பதவி உயர்வுபெற்ற டாக்டர்

யாழ்ப்பாணநகரின் சுகாதாரவைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வருகின்ற டக்றர் என். சிவஞானம் அவர்கள் இம்மாதநடுப்பகுதி முதல் யாழ்ப்பாணமாவட்டச் சட்டவைத்திய அதிகாரியாகப் பதவிஉயர்வு பெற்றிருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க இலக்கிய மாதம்

ஏ. பி. வி. கோமஸ், பி, ஏ.

என்றுமுள செந்தமிழின் இலக்கியத் துறையிலே, நின்றுநிலவும் ஓர் இடம் உண்டு நம்திருமறைக்கு என்பதைக் கண்டும் வாளாவிருப்பது நன்றல்ல நமக்கு. ஆம்—

நம் திருமறையில் உதித்தவர்கள் தான், இத்திருநாட்டில் முதன் முதல் அச்சகங்களை உருவாக்கிப் புத்தங்களையும் பத்திரிகைகளையும் வெளியிட்டது. நம் திருமறையைச் சேர்ந்த வீரமாமுனிவர் என்னும் தீந்தமிழ்க் காவலர் சதுர் அகராதி மூலம் வழிகாட்ட, முதன்முதல் தமிழ்அகராதியைச்சேர்த்துத் தமிழ் அன்னைக்கு ஆரமாக அணிவித்தவர் நம்மவரே. நாவலென்னும் நவமான இலக்கிய மரபைத் தாய்த்தமிழுக்குத் தரவேண்டி, முதன் முதல் நாவலை இயற்றி நல்கியவரும் நம் திருமறையில் வந்தவரே.

இவ்வாறு, தமிழ் இலக்கியத் துறையில்தகுந்த இடத்தை நம் தாய்த்திருமறைவகிப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். தமிழ் வளர்க்கத் தளராது உழைத்திருக்கிறது நம் திருமறை. இதை மறுப்பாரும் மறைப்பாரும் இருக்கவேமுடியாது.

இவ்வாறு, எத்தனையோ இலக்கியத் துறையில் ஏற்றமிகு இடம் வகித்தது அன்று நம் திருமறை. ஆனால், இன்று .........?

ஏன்? வளர்ந்துவந்த ஒரு சமூகத்தினை, அது நடந்துவந்த பாதையினை அங்கு எழுந்துவந்த இலக்கியங்களைக் கொண்டு அளந்து விடலாம் என்பது இலக்கிய ஆய்வாளர்களின் துணிபு. இலக்கியப் படைப்புக்கள் ஒருமக்களின் வளர்ச்சியையும், உயர்ச்சியையும், அவர்தம் உளப் பண்பாட்டையும் நாகரிகத்தையும்,வாழ்வியலையும் நலமே காட்டும் கண்ணாடிக் கருவிதானே. ஏன்? மக்கள் வாழ்விலிருந்து அரும்பி, அவர்தம் எண்ணத்திற்கு உருவளித்து, மலர்வதைத்தானே இலக்கியம் என்பர்.

தமிழர்கள் என்ன விதிவிலக்கா? அவர்கள் உள்ளத்தையும் இலக்கியம் பின்னிப் பற்றிக்கொண்டு பிணைந்துதானே இருக்கிறது. ஆம், தமிழ் இலக்கியம் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேம்பட்டது என்று கணிக்கப்படுகின்றதே. தமிழன் வாழ்வியல் இலக்கிய வாழ்வியலாகவே மாறிவிட்டதை நாம் காண்கிறோமே. ஆகையால்தான் என்னவோ -அந்தத் தமிழ்மனம் இலக்கியத்தினையே நாடிக்கொண்டிருக்கிறது, தாவிக் கொண்டேயிருக்கின்றது. ஆமாம், எங்கே இலக்கியப் புதுமையைக் காண்கிறானோ அங்கே அத்தமிழ் மனம் அடைக்கலம் புகுந்து விடுகிறது. இல்லையா?

இவ்வளவு காலமும் இல்லாதவாறு இன்று இலக்கிய விழிப்புணர்ச்சி காணப்படுகிறது என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். எதையாவது வாசிக்கவேண்டும் என்றஎண்ணம் என்றுமில்லாத அளவு இன்று தாண்டவமாடி வருகின்றது. ஆகையால், கண்டதை வாசிக்கப் பண்டிதனுவான் என்ற வறட்டுத் தத்துவத்தைக்கடைப்பிடித்துக் கையில் அகப்பட்டதைத் திறந்து வாசித்துவிடுகிறான். ஆனால்... அப்படி அகப்படுவதுதான் என்ன? அந்தோ ஒரு தகாத பிரசுரம், அல்லது ஏதாவது ஒரு துப்பறியும்நாவல். பரிதாபம்!

இந்நிலையில் நம்மை நாமே சற்று ஆராய்ந்து பார்த்தால் நல்லது என்பது எம் எண்ணம்- ஏன் இந்தத் தகாத பிரசுரங்களின் இடத்தை நம் கத்தோலிக்க ஏடுகள் பிடிப்பதில்லை. ஏன? நம் கத்தோலிக்க ஏடுகளில் கவர்ச்சியில்லை என்பதுதானு அர்த்தம்? ஆனால், கத்தோலிக்க வெளியீடுகளில் கண்ணினைக் கவரும் கவர்ச்சிப் படங்களும், கருத்தைக் கவரும் காதல் கதைகளும் இல்லையென்பதால் கவர்ச்சியில்லையென்று கூறிவிட முடியுமா என்ன? அந்தோ, காதல் கதைகளும், கவர்ச்சிப் படங்களும் தூய மறையின் ஏற்றமிகு ஏடுகளுக்கு ஒத்துவாராதே.

ஆயின் நாம் என்ன செய்வது? நாம் எண்ணுவதெல்லாம் உயர்வுள்ளதாய் இருப்பதால், கத்தோலிக்கப் பத்திரிகைகள் இறையை, உண்மையை, நீதியை, ஒழுக்கத்தை எண்ணுகின்றன. ஏன்? உண்மைக் காதலைப் போற்றத்தான் செய்கின்றன; நேர்மையான வீரத்தை வளர்க்கத்தான் செய்கின்றன; விசுவாசவாழ்வை ஊட்டத்தான் செய்கின்றன. ஆதலின் உண்மையான காதலை, நேர்மையான வீரத்தை, விசுவாச வாழ்க்கையை நாம் பத்திரிகைகளில் எதிர்பார்த்தால் நிச்சயம் நம் கத்தோலிக்கப் பத்திரிகைகள் கவர்ச்சியுள்ளவைகளாக இருக்கத்தான் வேண்டும். அப்படிக் கவர்ச்சியைக் காணவில்லையென்றால், அதன் கருத்து என்ன? நாம் நாடுவதே நாலாந்தரச் சரக்கை என்பதுதானே. அது கத்தோலிக்க பத்திரிகையாளர்களின் குற்றமல்லவே. ஆனாலும்—

கத்தோலிக்க தமிழ் உலகம் இலக்கிய வாழ்வில் சற்றுப் பின்தங்கிவிட்டிருந்தது என்றே கூறவேண்டும். தமிழ்த்தாயை விடுத்து ஆங்கிலச் செவிலித் தாயை நாடிநின்றோம்;உண்மை. ஆனால் இன்றைய இலக்கியமறுமலர்ச்சியுடன், சற்று விழிப்புணர்ச்சி வந்திருக்கிறது என்பதை நாம் மறுக்கமுடியாது. மறுமலர்ச்சியின் மணம் கத்தோலிக்க இலக்கிய உலகிலும் கமழத் தொடங்கிவிட்டது. ஆகையால் பிறரைக் கவரக்கூடிய முறையில் எழுதக்கூடிய எழுத்தாளர்கள் கத்தோலிக்க எழுத்தாளர்கள் பெருகி வருகிறார்கள்; இன்னும் பெருக வேண்டும். இன்றைய வாசகர்களின் தேவைக்கேற்ப எழுதக்கூடிய ஏற்றமிகு கத்தோலிக்க எழுத்தாளர்கள் தேவை. ஆமாம், குறுகிய சொற்றொடர்கள்; குறுகிய வாக்கியங்கள், அவற்றிலே விறுவிறுப்பு. அன்றி அடுக்குத் தொடரும், எதுகையும் மோனையும் கலந்த அழகுத்தமிழ். இவ்வாறு எழுதக்கூடிய இளம்எழுத்தாளர்கள் தோன்றுகின்றனர்; இன்னும் தோன்றவேண்டும், இல்லை. எல்லாரையும் கவரும் வகையில் எழுதக்கூடிய எழுத்தாளர்கள் மலரவேண்டும்.

கத்தோலிக்க ஏடுகளும், புனித காதலையும்,உண்மை வீரத்தையும், உயரிய பண்புகளையும் தன்னுள் அடக்கிய நல்ல நாவல்களுக்கும், சிறப்புமிக்க சிறுகதைகளுக்கும், கருத்துநிறைந்த கவிதைகளுக்கும் ஏற்ற இடம் கொடுத்து எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும்.

பத்திரிகைகள் வளர்ந்தால் மட்டும் போதாது. அவைகளுக்குப் பக்கபலமான வாசகர்களும் தம் கடமையைச் சரிவரச் செய்யவேண்டும். ஒவ்வொரு கத்தோலிக்க ஆணினதும் பெண்ணினதும் கடமைதான் என்ன? ஆமாம், ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒவ்வோர் இலக்கிய அப்போஸ்தலராக மாறவேண்டும். அது எப்படி ஆகமுடியும் என்று கேட்பவருக்கு, இதோ 11-ம் பத்திநாதர் தரும் பவித்திரமான பதில், ஆம், “கத்தோலிக்க இலக்கியங்களைத் தான் வாசித்து, பிறர் வாசிக்கச் செய்வான் இலக்கிய அப்போஸ்தலன்.”

இதற்கு விளக்கம் தேவையில்லையே. ஆகையால், நம்கடமை என்ன என்று நமக்குத் தெரிகிறதுதானே.

நாம் கத்தோலிக்க இலக்கியங்களை வாசிப்பதுடன், மற்றவர்களையும் வாசிக்கச் செய்வது நம் கடமையென்று தெரிந்த பின்னும் செய்யாமல் இருந்தால் நாம் கடமையில் தவறியவராவோமல்லவா? ஏன், வாசிப்போர் இருந்தால்தானே எழுதுவோர் இருக்கமுடியும். எழுதுவோர் கவர்ச்சியாக எழுதினால்தான் வாசிப்போர் வாசிப்பர். ஆகையால், எழுதுவோர் கவர்ச்சியாக எழுதட்டும்; வாசிப்போர் வாசிப்புமூலம் எழுதுவோருக்கு ஊக்கமளிக்கட்டும். இவை மூலம் கத்தோலிக்க தமிழ் இலக்கியம் வளரட்டும். மணம் எங்கும் பரம்பட்டும்.

ஆம் ......

பேரருட் பெருந்தகை, கோலாஸ் ஆண்டகை கூறுவது என்ன? “இக்காலத்தில் அப்போஸ்தல ஊழியத்தில் மிகவும் பயன்பட்டிடும் சாதனம் அச்சுப் பிரசுரமே. குருவானவர் எங்கும் நுழைதல் முடியாது. பத்திரிகை எங்கும் நுழைகிறது. மௌனத்தில் பேசுகிறது.”

மலர்க கத்தோலிக்க எழுத்தாளர்கள்!
வளர்க கத்தோலிக்க வாசகர்கள்!
வாழ்க கத்தோலிக்க பிரசுரங்கள்!

# துன்பம் இறைவனின் அன்பின் சின்னம்

துன்பத்தில் அன்பு சோதிக்கப்படுகிறது. ஒருவரை நாம் நேசிக்கும் பொழுது அவரின் நன்மையையே விரும்புகிறோம். அவர் விரும்புவதை நாம் விரும்புகிறோம். அவருக்கு வேதனை அளிக்கும் பொருளையோ, ஆளையோ வெறுக்கிறோம். அன்பரின் நலனுக்காக எங்களையே தியாகம்செய்ய விரும்புகிறோம். உலகிலே கணக்கற்ற பெண்கள் தங்கள்கணவர்மாரைப்பிரியப்படுத்த எண்ணற்ற இன்னல்களை அனுபவிக்கிறார்கள். நல்லகணவர்மாரும் அப்படியே தங்கள் மனைவிமாரின் நலத்துக்காகத் தங்களைத் தியாகம்செய்கிறார்கள். உண்மைஅன்பர் அன்பருக்காகத் தனது உயிரையுங்கூடத் தியாகம் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். நண்பருக்காகத் தனதுஉயிரைத் தியாகம் செய்வதைவிட மாபெரும்அன்பு உலகில் இல்லைஎனக்காட்டினார் அன்பின் அன்பர் தமது அகோரமரணத்தால்.

துன்பம் எங்கள் வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் எங்களை வரவேற்கும். வாழ்க்கையில் துன்பம் பலவிதமான தோற்றங்களோடு தோன்றும். வாதைவருத்தங்களிலும், விபத்துக்களிலும், மனக்கவலைகளிலும், இனபந்துக்களிலும், சடுதிமரணத்தாலும், சமாதானம்குன்றிய இல்லத்திலும், பரீட்சையில் சித்தியடையாத சந்தர்ப்பத்திலும் எங்களைத் துன்பம் வரவேற்கும். துன்பத்தின் மத்தியிலே மானிடன் கேட்கின்றான், ஏன் துன்பம்? இன்பம் எங்கே? இன்பக்கடவுள் இன்பத்தை எனக்களிக்காமல் ஏன் துன்பத்தைத் தருகிறார்என முறுமுறுக்கிறான் மர்ம மனிதன். மானிடனே, நீ இதை அறிவாயா? துன்பம்இன்றி இன்பம் இல்லை வாழ்விலே; புயல் இன்றி அமைதி இல்லை கடலிலே; சிலுவை இன்றி மணிமகுடம் இல்லை; பெரிய வெள்ளி இன்றி உயிர்த்தஞாயிறு இல்லை. இதைக்காட்டவே இன்பத்தில் தவழ்ந்தகடவுள் உலகில் முப்பத்து மூன்றுவருடம் துன்பத்தில் உழன்றார்.

நமது உலகவாழ்க்கை போர்க்களம். அயராது தீமையைவெல்ல நாம் போராடவேண்டும். உலகம் பரலோகம் அல்ல. எனவே, துன்பம்உலகில்உண்டு. துன்பம் பரிசுத்ததனத்தின் சுத்தியலாகும். கொல்லன் எப்படித் தங்கத்தை நெருப்பில்இட்டுச் சுத்தப்படுத்துகிறானே அப்படியே கடவுளும் துன்பத்தால் எங்களைப் புனிதப்படுத்துகிறார். கடவுள் அர்ச். சின்னப்பருக்குக் கணக்கற்ற துன்பங்களை அனுப்பினார். அர்ச். சின்னப்பர் அழுதார், விம்மினார்,இவைகள் என்னைவிட்டு நீங்கட்டும்என இறைவனைக் கெஞ்சினார். விண்ணுலக தந்தை கூறினார், “எனது அருள் உம்மிடம் இருக்கின்றன. அது உமக்குப்போதும். உமது பலவீனத்தில் எனதுவல்லபம் நன்குதெரியட்டும்” என்றார். கடவுளே துன்பத்தைக்கண்டு கதறினார். “பிதாவே, இப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கட்டும்.” இருந்தும் துன்பம் கடவுளின் சித்தம்என ஏற்றுக்கொண்டார். துன்பத்தில் இன்பம் கண்டார்.

எங்களின் அன்பைச் சோதிக்கவே இறைவன் துன்பத்தை விடுகிறார். இறைவன் தான் நேசிப்பவர்களுக்கு அனுப்பும் வெகுமதி துன்பமே. இருந்தும் அவர் எங்கள் அன்புத்தந்தை. எங்கள் பெலனுக்கு ஏற்றஅளவே துன்பத்தை அனுப்புவார். குழந்தையை நேசிக்கும் அன்னை, குழந்தையின் நன்மைக்கே கசப்பானமருந்தை அளிக்கிறார். அவ்வண்ணமே வானலோக எங்கள் அன்புத்தந்தையும் நமது நலனைக் கருதியே துன்பத்தை அனுப்புகிறார். துன்பம் எல்லோருக்கும் உண்டு. துன்பத்தில் இன்முகம் காட்டுகிறவர்கள் வெகு சொற்பப்பேரே. துன்பம் புண்ணியம்வளரும் பூந்தோட்டமாகும். துன்பத்திலே எங்கள்பலவீனத்தையும், புண்ணியத்தையும் அறியலாம். துன்பத்திலிருந்து நாங்கள் தப்பிஓட முடியாது. வாழ்க்கையின் எல்லாப்பாதையிலும் துன்பம்வரும். துன்பத்தில் இன்முகம் காட்டுவோம், இன்பம் அடைவோம்.

வே. அந்தனி ஜோண்

## கடலட்டைப் பிசின்

எருக்கலம்பிட்டியிலே கடல்அட்டைகளிலிருந்து சிறந்தஒட்டுப்பிசின் செய்வதற்கென அங்குள்ளகூட்டுறவுப் பரிசோதகர்ஒருவர் எடுத்துக்கொண்ட முயற்சி தகுந்தபலன் அளிக்கும்போல் இருக்கிறது. இதுவிஷயமாய்ச் சில குறித்தஅளவான கடலட்டைகள் பரிசீலனைக்கென்று கொழும்புக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றன.


## வாழ்க்கைச் செலவுப்புள்ளி

சென்றதைமாதத்திலே வாழ்க்கைச் செலவு 111·2 புள்ளிகளாக அதிகரித்திருப்பதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. கடந்த சிலவருடங்களிலே இந்தப்புள்ளித்தொகை மாதந்தோறும் அதிகரித்துவந்து சென்றதைமாதத்திலே முந்தியஎந்தமாதத்திலும்பார்க்க அதிகம்உயர்ந்திருக்கிறது.

## பச்சைஅரிசி விநியோகம்

யாழ்ப்பாணப்பகுதியிலே சென்றவாரமும், தொடர்ந்துஇவ்வாரமும் கூப்பனுக்குப் பச்சைஅரிசி வழங்கப்படுவதால் மக்கள்—விசேஷமாகப் பிள்ளைகள் வாந்தி, வயிற்றோட்டம், மற்றும்வயிற்றுக் கோளாறுகண்டு வருந்துவதாலே, இந்தஅரிசிவழங்குவதை நிறுத்துப்படியாகக் கேட்டு யாழ்ப்பாண எம். பி. உணவுமந்திரிக்குத் தந்திமூலம்கேட்டிருக்கின்றார். இதுவிஷயமாய் அரசாங்கஅதிபருக்கும், யாழ்ப்பாணத்திலுள்ள உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் முறையிடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்.**

எதிர்வரும் 12 ந் தேதி புதன்கிழமை எங்கள் தெற்றியில் பரிசுத்த சாம்பல் பூசித் தபசுகாலத்தை ஆரம்பிக்க இருக்கிறேம். நமது ஆண்டவர் கானகத்தில் நாற்பதுநாட்களாகப் புரிந்த கடுந்தவத்தைத் ஞாபகப்படுத்தி நாமும் நாற்பது நாட்களாகத் தபசுகாலத்தை அனுசரிப்போமாக.

என்னசெய்யலாம்? அரைமணிநேரம் நித்திரைத் தியாகம் செய்யலாம்— பூசைப்பலிக்குச் சமுகம் கொடுப்பதற்காக. இடைநேரச் சில உணவைத் தியாகம்செய்யலாம்—தருமம் கொடுப்பதற்காக. ஓய்வுநேரத்தில் கொஞ்சத்தைத் தியாகம் செய்யலாம்—நற்கருணைச் சந்திப்புக்காக, அல்லது சிலுவைப்பாதை இயாணிப்பதற்காக. சிறுவருக்கோ வயோதிபருக்கோ குற்றேவல் புரியலாம்—சகோதர அன்பில் வளர்வதற்காக.

எதைச்செய்யத் தீர்மானித்தாலும் அமைதியுடனும், உதாரகுணத்துடனும் அடிக்கடி செய்யுங்கள்.

— அண்ணு.

# நாவும் நாமும்

"நாவைப்பற்றி நமக்குத்தெரியாதது என்ன இருக்கிறது?"என்று என்னைக் கேட்டுவிடாதீர். நாவைப்பற்றிய ஆராய்ச்சியில்இறங்க நான் ஆராய்ச்சியாளனுமல்ல, மாபெரும் டக்றருமல்ல. ஏதோ என் நாவில் வந்தவற்றைக் கூறி விடுகிறேன். ஓர் எழுத்தாலான அவயவங்களில் ஒன்றுதான் நம் நா. கடுகு சிறிதாயிருந்தாலும், காரம் பெரிதாய் இருப்பதுபோல, இதுவும் உருவத்தில் சிறிதாயிருப்பினும் பெரும் கொலைபாதகங்களுக்குக்கூடக் காரணமாய்இருக்கிறது. உணவுகளின்உருசிஅறிவதும், பற்களுக்கு உணவைப் புரட்டிக்கொடுப்பதும், உமிழ்நீர் சுரப்பதுமே இதன் முக்கிய தொழில்களாகும். நாம் பேசுவதும் இதன் உதவியினுலேயே.

"தீயினுல் சுட்டபுண் உள்ளாறும் ஆறுதே நாவினுற் சுட்டவடு" என்று நாவைப்பற்றி வள்ளுவப்பெருந்தகை கூறியிருப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இனி நாபற்றி ஆகமம் என்ன கூறுகிறதென்று ஆராய்வோம். கிறீஸ்துவின் முன்னேடியான ஸ்நாபகர் பிறப்பைத் தேவதூதன் அறிவித்தபோது சக்கரியாஸ் நம்பாதபடியால் அவர் பிறக்குமட்டும் பேசமுடியாத செவிட்டுமையாய் இருந்தார். யேசுநாதர் பரலோகத்துக்கு எழுந்தருளிய பத்தாம் நாள், இஸ்பிரீத்துசாந்து சருவேசுரன் அப்போஸ்தலர்மேல் அக்கினிநாக்கு ரூபமாய் இறங்கினர். இவை சுவிசேஷத்தில் உள்ளவை.

அப்போஸ்தலரான அர்ச். யாகப்பர் தமது நிருபத்தில் கூறுவதாவது, "நாவானது சிறு அவயவமாய் இருந்தாலும் பெரியகாரியங்களை மூட்டுகிறது. எத்தனையோ பெருங்காடுகளை ஒரு நெருப்புப்பொறி சுட்டெரிக்கக் காண்கிறேம்" (யாக. 3, 5). இனிபழமொழி ஆகமம் என்ன கூறுகிறதென்றல், "தன் நாவைப் பத்திரம் பண்ணுகிறவன் தன்னுத்துமத்தைப் பாதுகாக்கிறுன்" (பழ. 13, 3). வார்த்தைகளின் நிரட்சியில் குற்றமிராமலிராது. "தன் உதடுகளை அடக்கிறவனே மகாபுத்திமான்" (பழ. 10: 19). "சத்திய உதடுகள் என்றென்றைக்கும் ஸ்திரமாயிருக்கும். பொய்நாவோ கர்த்தருக்கு அருவருப்பானதாய் இருக்கும்" (பழ. 19, 22). "பொல்லாதவன் அநியாய உதட்டுக்குக் கீழ்ப்படிகிறுன். வஞ்சனைக்காரன் பொய்சொல்லும் நாவுக்குச் செவிகொடுக்கிறுன்" (பழ. 17, 4.). எனவே நாம் என்னசெய்ய வேண்டும்? "வெடுவெடுப்புள்ள நாவை உன்னிடமிருந்து அகற்று; கோள்சொல்லும் உதடுகள் உனக்குத் தொலைவிலிருக்கட்டும் (பழ. 4:24). "கோள்சொல்லும்வாய் ஆத்துமத்தைக் கொல்லுகின்றது" (ஞான 1: 11). புறணிபேசுகிறவனைவிட, சர்ப்பத்தின்கடி அதிக கெடுதியல்ல. இப்படியே ஆகமம் நாபற்றிக் குறிப்பிட்டுக் கொண்டுபோகிறது.

எனவே, நாமும் எமதுநாவை அடக்கி ஆகமம்கூறும்வழியில் நடப்போமானுல் உண்மையில் பல கொலைபாதகங்களுக்குக்கூடக் காரணமாய்இருக்கும் எம் நா எமக்குப் பரலோகபாதைகளைப் பரிசாக அளிக்கும். நா அடங்க 'நான்' அடங்கும், 'நான்'அடங்க வான் அடையலாம்.

இ. பேர்ணுட்

## சொக்கனின் தியாகம்

ஒரு குளத்தின் மத்தியில் கொக்கு ஒன்று நீந்திக்கொண்டிருந்த மீன்களை ஒவ்வொன்ருகக் கொத்திக்கொண்டிருந்தது. ஒவ்வொருசமயமும் கொக்கு மீனைத் தண்ணீரில் இருந்து கொத்தி எடுக்கும் போதும் அங்கு மறைந்து பார்த்துக் கொண்டிருந்த காகம்ஒன்று திடீரெனப்பறந்துவந்து கொக்கின் மீன்களைத் தட்டிச் சென்றது. மீன்கள்பறிபோவதை நினைத்து எள்ளளவேனும் மனம் நோகாத கொக்கு மீண்டும் மீண்டும் மீன்களைத் தண்ணீரிலிருந்து எடுத்துக் கொண்டேயிருந்தது. இச்செய்கையை மிகவும் அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த ஓர் எலி கொக்கிடம் வந்து "ஐயா, பெரியவரே! அந்தப் பொல்லாதகாகம் நீங்கள் கொத்தி எடுக்கும் மீன்களை வெகு லாவகமாகத் தட்டிக்கொண்டு போகிறதே! ஆனுல், நீங்கள் கொஞ்சமேனும் கலங்குவதாகத் தெரியவில்லையே! ஏன்?" என வினவியது. அதற்கு அந்தக்கொக்கு: "பாவம் என்னைப்போல் அந்தக் காகத்தினுல் தண்ணீரில் நின்று மீனைப்பிடித்துப் பசியைத் தீர்த்துக் கொள்ளமுடியாது. அதனுல்தான் நான் கொஞ்ச மீன்களை எடுத்துப் போக அதற்கு வசதி செய்து கொடுக்கின்றேன். பிறருக்கு உபகாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம், கொஞ்சம் தியாக புத்தி இருந்தால்தான் ஏற்படும்" என்று சொல்லி முடித்தது.

ஜே. எ[illegible]

# அர்ச். கத்தரீனம்மாள்

அர்ச். கத்தரீனம்மாள் உயர்ந்த கோத்திரத்தினின்று உதித்து, தனக்குப் 18-ம் பிராயம் நடக்கையில் அர்ச். தோமினிக்குசபையில் உட்பட்டாள். இவளுக்கு ஒருநாள் திவ்வியகர்த்தர் பாடுபட்டமேரையாகக் காட்சியளித்தபோது, அதனுல்இவள் எவ்வளவு துக்கதுயரம் கொண்டாளெனில், மூன்றுவாரமாய் நோய் கண்டு படுக்கையில் கிடந்தாள். பன்னிரண்டு வருஷகாலமாய்ப் பிரதி வெள்ளிக்கிழமையிலும் பரவசங்கொள்ளுவாள், நமது கர்த்தரைப்போல் தலையில் முள்முடியும், இருகரங்களிலும், பாதங்களிலும், இடதுபக்கத்திலுமாக ஐந்துகாயங்களையும் பெறப்பாக்கியம் பெற்றுள். இந்தக்காயங்களால் இவள்வாக்குக் கெட்டாதவாதை நோவுகளை அனுபவித்து அவைகளை உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுப்பாள். அந்த ஆத்துமாக்கள்மீது இவளுக்கு எவ்வளவு இரக்கமும் பக்தியும் இருந்ததெனில் தன் செபதபங்களை எல்லாம் அவர்களுக்கு ஒப்புக்கொடுப்பாள்: அந்நாடுகளில் மரித்தவர்களின்பந்துக்களும், சிநேகிதரும் அர்ச். கத்தரீனம்மாளிடம் ஓடிச்சென்று மரித்ததங்களுடையவர்களுக்காக வேண்டிக் கொள்ளுமாறு இவளை மன்றுடுவார்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# அங்கத்தவர் வரிசையிலே

B. 230 செல்வன் யோ. அல்பேட், யாழ்ப்பாணம்.
,, 231 செல்வி இ. பிரான்சிஸ்கா செல்லா, மாதகல்.
,, 232 ,, அஞ்சலா மரியாம்பிள்ளை, ஊறணி.
,, 233 ,, புஷ்பராணி சிங்கராயர், ஊறணி.
,, 234 ,, தோமஸ் பத்திமாமலர், நெடுந்தீவு.
,, 235 ,, கபிரியேற்பிள்ளை லோரு, சில்லாலை.
,, 236 செல்வன் யோ. யேசுராசா, மல்லாகம்.
,, 237 செல்வி சேலிகபிரியேல், நோர்வூட்.
,, 238 ,, மேரி எலிசபேத் கபிரியேல், நோர்வூட்.
,, 239 ,, யூலியற் தேவதாசன், மன்னர்.
,, 240 செல்வன் அன்ரன் தவநாயகம், யாழ்ப்பாணம்,
,, 241 செல்வி மு. மரிய புஷ்பம், இளமருதங்குளம்.
,, 242 ,, தொ. மேரிபிரான்சிஸ்கா மாதகல்.
,, 243 ,, மா. மறிஸ்ரெலா, மாதகல்.
,, 244 ,, அ. மார்த்தா, தேத்தாப்பளை.
,, 245 ,, றீற்ரு மரியநாயகம், காங்கேசன்துறை:
,, 246 ,, ஜெம்மா மரியநாயகம், காங்கேசன்துறை:
,, 247 செல்வன் அ. எட்மன், நாவற்காடு.
,, 248 ,, ஜெரமி மரியநாயகம், காங்கேசன்துறை.
,, 249 செல்வி அ. திரேசா சூரியகுமாரி, வவுனியா.
,, 250 ,, எஸ். எஸ். பிரகாசம்மாள், பொகவந்தலாவா.
,, 251 செல்வன் யோ. அன்ரனி கிறிஸ்தோத்திரம், வவுனியா:
,, 252 செல்வி செபமாலை லூர்துமேரி, மூகத்துவாரம்,
,, 253 செல்வன் சூ. பெனடிற், தேத்தாப்பளை.
,, 254 செல்வி யோ. செபமாலை, முருங்கன்.

## பரதேசியின் பரிதாபம்

ஒரு விவசாயி தன் மனைவிக்குப் பழம்என்றும்; தன் பிள்ளைக்குச் சீனி என்றும்; அவர்கள் வளர்த்து வந்த எருமை மாட்டிற்கு விருந்தாளி என்றும்; கன்றுக்குட்டிக்கு குடுமி என்றும் செல்லப் பெயரிட்டிருந்தான். இவன் அதிதிகளுக்கு அன்னமிட்டு அதனுற் கிடைக்கும் பேறு பலன்களை அனுபவிக்க விழைந்தான். ஒருநாள் வயலில் வேலை செய்து கொண்டிருக்கையில் ஒரு பரதேசி அவ் வழியாக வரக்கண்டு, அவரை வணங்கி "சுவாமி வீட்டில் பழம் இருக்கிறது. போய் சாப்பிட்டு விட்டுப் போங்கள்" என்றுன்; அப்பரதேசி இவனை ஆசீர்வதித்து விட்டு வீடு நோக்கி வந்து சேர்ந்தான். விவசாயியின் மனைவி பரதேசியைக் கண்டு வணங்கி "சுவாமி உட்காருங்கள், சீனி வரட்டும்" என்றுள். கணவன் தர்மிஷ்டன் என்றுல் அவன் மனைவி ஒரு படி மேலே இருக்கிறுளே! இன்று நமக்கு வேட்டைதான் என்று பரதேசி ஆனந்தசாகரத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்தார். வயலிலிருந்து விவசாயி புறப்பட்டு வீடுவந்து சேரும் போது அவர்களின் எருமை மேய்ச்சலிலிருந்து வீடுவந்து சேர்ந்தது. "அடியே விருந்தாளியைப் பிடித்துக் கட்டு" என்றுன் விவசாயி. அப்பொழுது கன்றுக்குட்டி கட்டிலிருந்து அவிழ்த்துக்கொண்டு வாசல் பக்கம் துள்ளினது. "நீங்கள் குடுமியைப்பிடித்துக்கொள்ளுங்கள்" என்றுள் மனைவி. "அடியே கதவைச் சாத்திப்பூட்டு, ஓடிவிடாமல்" என்[illegible] இந்த தர்பாரை உன்னிப்பாகக் கவனித்த பரதேசி இவர்களிடமிருந்து தப்பினுல் போதுமென விழுந்தடித்து வெளியே ஓடினுன்.

ஜயந்தி தோமஸ் [illegible]193

## சிரிக்கும் எழிலே!

கோடிமலர்கள் அழகுகண்டோம்
குழந்தாய் உனக்கு நிகராமோ?
பாடி மகிழும் அன்புமலர்,
பாரில் உனக்கே எழில் சொந்தம்!

•

மலர்ந்த பூவில் தேனெழுகும்
மறுநாள் வாடிக் காய்ந்துவிடும்;
அலர்ந்தும் மழலைத் தேன் பிலிற்றும்
அழகே! குழந்தாய் நினதுமுகம்.

•

குறும்பும் நகையும் புரிந்திடுவாய்;
கொள்ளை இன்பம் ஈந்திடுவாய்;
அரும்பும் ஆசைப் பெருக்காலே
அள்ளி அணைப்பர் உனைமார்பில்.

•

உள்ளத் தூய்மை முகம் காட்டும்
ஒளிரும் அழகு இருவிழியில்;
துள்ளும் மகிழ்ச்சி சூழ்ந்திருக்கும்;
துயரை நீக்கும் புதுநிலவே!

•

இல்லம் மகிழ நீ இருப்பாய்;
இறைவன் மகிழ்ந்து உனில்
இருப்பார்
செல்வம் நீயே! பெற்றேர்க்குச்
சிரிக்கும் எழிலே! செழுங்கனியே!

•

காதல்வாழ்வு கனிந்தினிக்கும்
கவலை தீரும் சுகம் பெருகும்
தீதல்லாத உன்செயல்கள்
சிந்தைக் கின்பம், இன்பமன்றே!

ஆசிரியர்: ச. அமிர்தநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யாத்திரையின் எதிரொலிகள்

**பரிசுத்த சின்னப்ப தந்தையின் பலஸ்தீன யாத்திரையின் பல அம்சங்கள்பற்றி இன்னமும் செய்திகள் வந்துகொண் டிருக்கின்றன. அவற்றுள்சில இங்கே தரப்படுகின்றன.**

## நான்தான் கர்தினல்:

பாப்பரசரின் யாத்திரையின்போது அவரின் உதவியாளர்கள் பலத்த இன்னல்களைத் தாங்கநேரிட்டது. சிலுவையைச்சுமந்து கொண்டு நமதாண்டவர் நடந்துசென்ற பாதையில் பாப்பரசர் சிலுவைப்பாதை செய்தவேளை சனத்திரளைக்கட்டுக்கடக்க முடியவில்லை. ஆவலும், ஆர்வமும், உற்சாகமும்கொண்ட சனத்திரள் காவலையும்மீறிப் பாப்புவைச் சூழ்ந்துகொண்டது. அந்தச் சனத்திரளை அகற்றிப் பாப்பு நடந்து செல்ல வழி செய்வதற்கு ஆராபிய காவல்வீரர்கள் முனைந்தனர். சாத்வீக வழிகள் பயனற்றுப் போகவே தடிகளால் அடித்தும், துப்பாக்கிப்பிடங்கினால் தள்ளியும் மக்களை அப்புறப்படுத்தினர். அப்படித் தள்ளப்பட்டவர்களுள் பாப்பரசரின் இராச்சிய பாரமந்திரியான கர்தினல் சி. கியோக் ஞானி ஆண்டகையும் ஒருவர். அவர் பின்னுக்கித் தள்ளப்பட்டபோது நான்தான் கர்தினல், என்னைத் தள்ளாதீர்கள் என அவர் கெஞ்சிக் கேட்டாராம்.

* * *

## இழுத்தெடுத்தார்:

ஆயினும் கர்தினலைக் காப்பாற்றிய பெருமை ஒரு குருவருக்கே உரியது. வண. பியரி சேப்ரி என்ற அக்குருவர் வத்திக்கானின் கிறீஸ்தவ ஒற்றுமை இயக்க இலாகாவின் காரியதரிசியாவர். சனத்திரளினால் அவரும் நெடுந்தூரம் தள்ளப்பட்டபோது ஒடுங்கிய அத்தெருக்களின் பக்கமாக ஓடிச்சென்றார். அதிர்ஷ்டவசமாக ஒருசிறுகடையின் கதவு திறந்திருப்பது கண்டு அதற்குள் அடைக்கலம் புகுந்தார். பின்னர் அவர் சிலுவைப்பாதையை நோக்கினார். கடல்அலைகளினூடு தத்தளித்து அலைகளால் ஒதுக்கப்படுவதுபோல வத்திக்கானின் இராச்சியபார மந்திரியார் அவதிப்படுவதை அவர் கண்டார். உடனடியாகத் தமது கரங்களை நீட்டி கர்தினலை இழுத்தார். கடைக்காரனும் கர்தினலின் அங்கிகளைப்பிடித்திழுத்துத் தனது கடைக்குள் அடைக்கலம் தந்தான். சனத்திரளில் அமைதியேற்பட்ட பின்னரே இருவரும் வெளியேறினர்.

* * *

## கதவு சாத்தப்பட்டது:

கர்தினல்கள் திருச்சங்க தலைவர் திசரெனட் ஆண்டகை சிலுவைப்பாதை தொடங்கியபோது பாப்பரசரின் பக்கத்திலே சென்றவர், சனத்திரளினால் நெடுந்தூரம் தள்ளப்பட்டார். சிலுவைப்பாதையின் முடிவில் பாப்பு தேவாலயத்துள் நுழைந்தபோது சனத்திரளும் உட்புகமுனைந்தது. ஏற்கனவே உள்ளே புகுந்துவிட்ட நிருபர்களாலும் பார்வையாளர்களாலும் ஆலயம் தேங்கிவழிந்தது. எனவே பாப்பரசர் உட்பிரவேசித்ததும் மக்களைக் கட்டுப்படுத்த கோயிற் கதவுகள் அனைத்தும் சாத்தப்பட்டன. கர்தினல் திசரெனட் ஆண்டகை அப்போதுதான் சனத்திரளைச் சமாளித்துக்கொண்டு கதவண்டை வந்து சேர்ந்தார். ஆயினும் உட்புக முடியவில்லை. பின்னர் கர்தினலை ஆலயத்துள் காணாத வத்திக்கான் அதிகாரிகள் சிலர் வெளியே தேடிச் சென்றபோது கதவண்டை காத்திருந்த கர்தினலைக்கண்டு ஆலயத்துள் அழைத்துச் சென்றனர்.

* * *

## கிழிந்த அங்கி:

புனித யாத்திரை முடிவடைந்த பின்னர் பாப்பரசரது சக்கிறிஸ்தான் (சடங்குகளின்போது உதவுபவர்) மேதிராணியார் பீற்றர் வான்லீயர்டே ஆண்டகையிடம் பத்திரிகை நிருபர்கள் சென்றனர். புனிதயாத்திரைபற்றி அவரிடம் பலவினாக்களை விடுத்தனர். ஆண்டகை அவர்களைத் தமதறைக்கு அழைத்துச் சென்றார். தமதுஉடுப்புப் பெட்டியைத் திறந்தார். கிழிந்தும், நைந்தும், பழுதாகிவிட்டதுமான தமது அங்கிகளை எடுத்துக்காட்டினார். சிலுவைப்பாதையின்போதும் மற்றும் வைபவங்களின்போதும் பாப்புவின் பக்கத்தில் உதவியாய்நின்ற தமக்கு அலைமோதிய சனத்திரளால் கிடைத்தவை இவையென அவர் புன்முறுவலுடன் கூறினார்.

* * *

## பழுதடைந்த காலணிகள்:

கர்தினல்மார் திருச்சங்க தலைவர் திசரென்ட் ஆண்டகையின் பாதரட்சைகளும் பழுதடைந்து விட்டன. சிலுவைப்பாதையின்போது சனத்திரளினால் நெருக்கப்பட்டபோது அவர் அடைக்கலந்தேடி ஓர் ஒதுக்குப்புறமாகச் சென்றார். சில காவல்வீரர்கள் அவரை மக்களிடையிலிருந்து தூக்கி ஒருகரையில் விட்டனர். ஆயினும் அவரது பாதங்களை மக்களிடமிருந்து பிரித்தெடுக்கும் முயற்சியில் பாதரட்சைகள் பழுதடைந்துவிட்டன. இந்த மறக்கமுடியாத யாத்திரையின் நினைவாக இவைகளைப் பாதுகாப்பேன் என கர்தினல் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

* * *

## கர்தினலைக் காணவில்லை

சிலுவைப்பாதை தொடங்கியபோது பாப்பரசரின் உதவியாளராக மந்திரம் செபிக்கத் தொடங்கியவர் கர்தினல் ரெஸ்டா ஆண்டகை. இவரும் பாப்புவின் மந்திரிமார்களுள் ஒருவர். சிலுவைப்பாதை முடிந்து ஆலயத்துள் பூசை தொடங்கியபோது கர்தினல் ரெஸ்டாவைக் காணவில்லை. சில வத்திக்கான் அதிகாரிகள் அவரைத் தேடிச்சென்றனர். சிலமணி நேரங்களின்பின் அதாவது திவ்வியபூசை முடிவடைந்த பின்னரே சனத்திரளின் மத்தியில் அவரை அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது.

* * *

## பத்திரிகையாளரின் அதிர்ஷ்டம்

சிலுவைப்பாதையின் ஆறுவது ஸ்தலம். பொங்கிவந்த சனத்திரளைக் காவல்வீரர்களால் கட்டுப்படுத்த முடியாமல்போனது. இங்குதான் பாப்பரசர், உதவியாளர்கள், பத்திரிகை நிருபர்கள், அனைவரும் சனக்கும்பலினால் முட்டிமோதிநெருக்கப்பட்டுப் பலவித இன்னல்கட்கும் உள்ளாகிய தருணம். பிரான்சிய பத்திரிகைப்படப்பிடிப்பாளர் ஒருவர் பாப்புவின் காட்சியொன்றைப் படமாகப் பிடிப்பதில் முனைந்தார். சனத்திரளின் நிலையால் அது முடியாது போகவே வீதியின் மறுமுனையை நோக்கினார். திறந்திருந்த கதவொன்றைக்கண்டு அங்கு சென்றார். கன்னிகையொருத்தியைக் கண்டார். தம்மை மேல்வீட்டில் நின்று படம்பிடிக்க அனுமதிக்குமாறு கன்னிகாஸ்திரியிடம் கோரினார். எதுவுமே [illegible] அவரை மேல்வீட்டுக்கு அழைத்துச் சென்று ஓர் அறைக் கதவைத் திறந்தாள். அங்கே பாப்புவைக் கண்டார் பத்திரிகையாளர். ஆம், சனத்திரளைக் கட்டுப்படுத்தும்வரை பாப்புவை அந்த மடத்தினுள் அனுப்பியிருந்தார்கள். அதிர்ஷ்டவாளரான அவர் தம்மனம் போனபடி பாப்புவைப் பலதடவை படம்பிடித்தார். பின்னர் முழந்தாளிட்டு ஆசீர்வாதமும் பெற்றார். சில நிமிடங்கள் பாப்புவுடன் சம்பாஷணையும் செய்தார்.

* * *

## ஏமாறிய பேய்ரூட்:

பாப்புவின் பிரயாணத்தால் ஏமாற்றமடைந்தவர்கள் பேய்ரூட் நகரத்தைச் சேர்ந்தவர்கள். அம்மான்தளத்தில் காலநிலை சீராயிருக்காது என அவதான நிலையங்கள் தெரிவித்தவுடன் பாப்பு பிரயாணம் செய்த இராட்சச விமானத்தைப் பேய்ரூட் தளத்தில் இறக்கிப் பின்னர் சிறுவிமானமொன்றில் யெருசலேமுக்கு அழைத்துச் செல்வதென முடிவு செய்யப்பட்டது. இச்செய்தி வானொலிமூலம் தெரிவிக்கப்பட்டபோது பேய்ரூட் மக்கள் மகிழ்ச்சி கொண்டனர். விமானதளத்தில் ஏராளமாகக்கூடி பாப்புவின் தரிசனத்தைப்பெறக் காத்திருந்தனர். கடைசியில் அம்மானில் நிலைசீரடைந்துவிட்டதென அறிந்தபோது அவர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்தனர். எனினும் பாப்புவின் அலிட்டாலியா விமானம் பேய்ரூட்மக்களைத் திருப்திப்படுத்துமாறு அந்நகரின் மேலாகத் தாழப்பறந்து சென்றது. தாங்களடைந்த ஏமாற்றத்தை, விமானத்தைப் பார்ப்பதன்மூலம் போக்கினர் பேய்ரூட் மக்கள். விமானம் தாழப்பறந்தபோது மதபேதமின்றி ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. மக்கள் கைலேஞ்சிகளையும் கரங்களையும் வானத்தை நோக்கி அசைத்து பாப்பு வாழ்கவென ஆர்ப்பரித்தனர்.

* * *

## பத்திரிகையாளரின் பணி:

பாப்பரசரின் புனித யாத்திரையின் விபரங்களை உலகுக்கறிவிப்பதில் அகிலஉலகின் பிரதான பத்திரிகைகள் அனைத்தும் எடுத்துக்கொண்ட முயற்சி சொல்லுந்தரமன்று. 1500 பத்திரிகை நிருபர்கள், படப்பிடிப்பாளர்கள் தை மாதம் இரண்டாந்தேதியே அங்கு போய்ச் சேர்ந்துவிட்டனர். ராய்ட்டர்போன்ற செய்திநிறுவனங்களும், ஏராளமான சினிமாச்செய்தி ஸ்தாபனங்களும் செய்தி சேகரிப்பதிலும் படங்களைப் பிடிப்பதிலும் அரும்பாடுபட்டன. இரண்டாவது உலகமகா யுத்தத்தின்பின் செய்தி சேகரிப்பதில் நிருபர்கள் மகத்தான கஷ்டங்களை அனுபவித்தது பலஸ்தீன யாத்திரையின்போதுதான் என இந்த பத்திரிகையாளர்களில் ஒருவர் குறிப்பிட்டார்.

* * *

## சின்னப்ப பூங்கா:

பாப்பரசரின் பலஸ்தீன விஜயஞாபக 'சின்னப்ப பூங்கா' என்ற பெயருடன் யெருசலேமில் ஒரு நந்தவனம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நந்தவனத்தின் நடுவில் சின்னப்ப தந்தையால் நிறுவப்பட்ட ஒலிவஞ் செடி அழகுசெய்கின்றது. யோர்தான் மன்னர் உசேயின் அவர்கள் பாப்புவிடம் இருஒலிவங்கன்றுகளைக்கொடுத்தார், "ஒரு கன்றை உங்கள் புனித கரங்களால் யெருசலேமில் நாட்டுங்கள், மற்றதை எங்கள் நினைவாக ரோமைக்குக் கொண்டு செல்லுங்கள்" என்று மன்னர் கேட்டுக்கொண்டார். மற்றைய கன்று வத்திக்கான் மாளிகையில் தற்போது நாட்டப்பட்டுள்ளது.

சா. பெ.

---

## புதிய கிராமச்சங்கம்

தற்பொழுது மல்லாகக் கிராமச்சங்க நிர்வாகத்தின்கீழ் இருந்துவரும் அளவெட்டி, மல்லாகமாகிய இரு கிராமங்களையும் ஒன்றுசேர்த்து அளவெட்டிக் கிராமச்சங்கம் என்ற பெயருடன் ஒருபுதிய கிராமச்சங்கத்தை அமைக்கத் தலதாபனபகுதி நடவடிக்கை எடுத்துவருகிறது. மல்லாகக் கிராமச்சங்க நிர்வாகத்தின்கீழ் இருந்துவரும் ஏழாலை, குப்பிளான், புன்னாலைக் கட்டுவனுகிய கிராமங்களைச் சேர்த்து ஏழாலைக்கிராமச்சங்கம் அமைக்கப்படவிருக்கிறது.

---

## இளைப்பாறும் நீதியரசர்கள்

இலங்கைப் பிரதமநீதியரசராக 1956-ம்ஆண்டுமுதல் கடமையாற்றி வருகின்ற நீதியரசர் எச். எச். பஸநாயக்கா அவர்கள் வருகிறஆவணி மாதத்தில் இளைப்பாறவிருக்கின்றார். அப்போதுஇவருக்கு 63வயதாகும். தற்பொழுது காலியிலே வழக்கு விசாரணை நடத்திவருகின்ற நீதியரசர் எச். டபிள்யு. ஆர். வீரசூரியா அவர்கள் இம்மாதமுடிவில் இளைப்பாறுவார். அப்போது இவருக்கு 62வயதாகும்.

---

### நேர்த்தியின் பூர்த்தி

வரப்பிரசாதமாதாவின் படத்தை நம்பிக்கையுடன் தொங்கவைத்து அருகில் தீபம் ஏற்றித் தினமும், "சென்மபாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயே! பாவிகளுக்கு அடைக்கலமே! இதோ உம்முடைய அடைக்கலமாக ஓடிவந்தோம்; எங்கள் பேரில் இரக்கமாயிருந்து உமது திருக்குமாரனிடத்திலே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்" என்ற செபத்தையும், 3பிரியதத்த மந்திரத்தையும் பக்தியோடு சொல்லிவந்தேன்.

8-ம் நாள் கேட்டவரம் அநுகூலமானதை நன்றியுடன் தெரிவிக்கின்றேன் அவளின் நாமம் எங்கும் என்றென்றும் புகழப்படுவதாக.

ஆ. ந.

---

## அர்ச். கத்தரீ......

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

கள். மேலும் உத்தரிக்கிறஸ்தலத்துக்குப்போகும் ஆத்துமாக்களையும், அதைவிட்டுவெளிப்படும் ஆத்துமங்களையும்இப்புண்ணியவதிஅறியவரம் பெற்றிருந்தாள். இதுவுமன்றி, அர்ச்சியசிஷ்டர்களுடன் சம்பாஷித்தும் வருவாள். இவள் சகலபுண்ணியங்களையும் அனுஷ்டித்து, தேவதூதர் தேவபாடல்களைப் பாடுகையில் காலஞ்சென்றாள்,

இவளது திருநாளை திருச்சபை இம்மாதம் 13-ந்தேதி கொண்டாடி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விளக்கு

— வி. மரிய அந்தோனி —

பகலெல்லாம் சூரியன் ஒளி கொடுக்கிறான். யாரும் அப்பொழுது விளக்கைப் பொருட்படுத்துவதில்லை. மாலை மயங்க இருள் வந்து கவியவும் மின்விசையைத் தட்டிவிடுகிறோம். வீடு முழுவதும் பளிச்சென்று ஒளிவெள்ளம் பாவி இரவைப் பகலாக்கி விடுகிறது. மின்சாரம் நின்றுபோகிறது. எங்கும் ஒரே இருள். மூலையில் முடங்கிக் கிடக்கும் மண்ணெண்ணெய் விளக்குகளைத் தேடியெடுத்துப் பொருத்தி விளக்கொளி அமைக்கிறோம். இருள் ஒளியை விழுங்கவும், ஒளி இருளை விழுங்கவும் முயன்று பார்த்து, முடியாமல், ஒன்றையொன்று வெறித்து நோக்கிக்கொண்டிருக்கின்றன. நாமோ மின்விசையைத் தட்டிவிட்டும், அடுத்த வீடுகளை எட்டிப் பார்த்தும், மின்னொளியின் வருகை நோக்கித் தவங் கிடக்கிறோம். மண்ணெண்ணெய் விளக்கின் மங்கலொளி சிறிது சிறிதாகப் பிரகாசம் அடைவதுபோல் தோன்றுகிறது. அதனோடு பழகிப் பார்வை பெற நம் கண் முயன்றுகொண்டிருக்கிறது. ஒரு நொடியில் மின்சாரத் தொடர்பு வந்து மீண்டும் ஒளிவெள்ளம் பாவுகின்றது. சிறிது நேரத்தில் மண்ணெண்ணெய் விளக்கு மூலைக்குப் போய்விடுகிறது.

நல்ல மனைவி இந்த மண்ணெண்ணெய் விளக்கைப்போன்றவள். தான் ஒருத்தி இருப்பதை அவள் பகலொளிபோல் ஊருக்கும் உலகிற்கும் பறையடித்துக் கொண்டிருக்கமாட்டாள். மின்னொளி போல், தன் வீட்டிற்குள்ளே தனக்கு மிஞ்சியவர் யாருமில்லை என்று தம்பட்டமடித்துக்கொண்டிருக்கவும் மாட்டாள். தன்னைப் பிறர் மண்ணெண்ணெய் விளக்காக மதிப்பதையும் பொருட்படுத்தாமல், காரியம் முடிந்தபின் தன்னைப் புறக்கணிப்பதையும் கருத்திற் கொள்ளாமல், தன் உதவி இன்றியமையாததென்று அணுகிய போதெல்லாம் தயங்காமல் உதவி புரிந்து, மற்ற வேளைகளில் தானாகவே மறைவிடத்தில் ஒதுங்கிக்கொள்வாள். இது எப்பொழுது சாத்தியமாகும்? அவள் தன்னையே மண்ணெண்ணெய் விளக்காக மனப்பூர்வமாய் மதித்து, அந்நிலையிலே நிறைவுகொள்ளப் பழகி முடித்துக் கொண்டால்மட்டுமே இது சாத்தியமாகும்.

மண்ணெண்ணெய் விளக்காகத் தன்னை மதித்து மறைந்துவாழும் நல்லமனைவி, சமயங்களில் மின்னொளி போலவும் பகலொளிபோலவும் குடும்பத்தில் மிளிரவும் வேண்டும். தனக்குரிய பணிகள் இவையிவை என்று வரையறை செய்துகொண்டு, அவை முடிந்ததும் பிறவற்றைப்பற்றிக் கவலை கொள்ளாமல் அவள் ஒதுங்கி வாழ முடியாது; கூடாது. தன்னைப் பிறரெல்லாம் நாடிவந்து துணைகோர வேண்டும். தூக்கிவைத்துப் பேச வேண்டும் என்றெல்லாம் அவள் எதிர்பார்த்து நிற்கக்கூடாது. கணவன், மக்கள், உறவினர், அயலார் முதலிய யாவரும் எந்தநேரத்தில் தன்னை அணுகினாலும், தன்னால் இயன்றதெல்லாம் செய்ய அவள் எப்பொழுதும் தயாராய் இருக்கவேண்டும். சொல்வோமா, வேண்டாமா என்று எல்லோரும் தயங்கும் அளவிற்கு எடுத்தெறிந்து பேசும் இயல்பு அவளுக்கு அடாது.

'பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாது இருத்தல்'; 'எதிர்பேசும் மனையாளிற் பேய் நன்று' - என்றெல்லாம் நம்நாட்டில் வழங்கும் முதுமொழிகள் எழுத்திற்கெழுத்து நடைமுறைக்குப் பொருந்துவனவென்று கூறமுடியாது. மனைவி ஊமையாய் இருக்கவேண்டுமென்று யாரும் எதிர்பார்க்கமாட்டார். வெடுக்கென்று பேசி விரைவிலே கலகலப்பாகிவிடும் மனைவி, ஊமையாயிருந்து முகங்கறுக்க உம்மிட்டுக்கொண்டு முணுமுணுக்கும் மனைவியைக்காட்டிலும் எவ்வளவோ மேல். வெடுக்கென்று பேசாமலும், முணுமுணுக்காமலும், முகங் கறுக்காமலும் இருப்பவள் எவ்வளவு மேலானவள் என்று சொல்லத்தேவையில்லை. 'எதிர் பேசாது இருத்தல்' என்பது பேசாமலே இருத்தலாகாது; தீமையென்று தனக்குப்பட்டதையும் தெரிவிக்காமல் இருத்தலுமாகாது. நன்மையென்று தனக்குத் தெரிந்தாலும், தன்னைக் கலந்துகொண்டு செய்யாத காரணத்தால், அல்லது தன் விருப்பத்திற்கு மாறாக நடைபெறுகின்ற ஒரே காரணத்தால், அதற்கு முட்டுக்கட்டைபோடும் வழக்கத்தையே தவிர்க்கக் கூறுகிறது இந்தமுதுமொழி.

குடும்பம் என்பது விரிந்த பொருளுள்ள ஒருசொல். சாதாரணமாகக் கணவன், மனைவி, மக்கள் என்ற அளவிலே குடும்ப உறவைச் சுருக்கிக் கூறுகிறோம். இம்மூவரும் நான்கு சுவர்களுக்குள்ளே அடங்கிக் கிடப்பவர்கள் அல்லர். மூவருக்கும் தனித்தனி உலகங்கள் உண்டு. ஒவ்வொருவருக்கும் உற்றார், பெற்றார், உறவினர், நண்பர் என்று விரிந்த உலக உறவு உண்டு. இவர்களுக்கெல்லாம் செய்யவேண்டிய ஆசாரம் உபசாரம் என்றெல்லாம் நடைமுறை நாகரிக முறைகள் உண்டு. இவையெல்லாம் வெளியுலகோடு நின்றுபோவதில்லை. இல்லத்திலேயே அவை சிறந்த உருப்பெறவேண்டும். அதற்கு எல்லா வகையான வசதிகளும் நிறைந்துகிடந்தாலும், இல்லத்தரசி சிறந்து விளங்காவிடின் ஒருபயனும் இல்லை. வசதிகள் குறைந்தவிடத்தும் மனைவி சிறந்திருந்தால் நிறைந்தபயன் விளையும்.

"ஒப்புடன் முகம லர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலும் உண்பதே அமிர்த மாகும்;
முப்பழ மொடுபா லன்னம் முகங் கடுத் திடுவாராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி ஆகுந் தானே."

மனைவி தன் கணவனுக்கு உணவு முதலியன முறைப்படி வழங்கி அவனைப் பேணவேண்டும் என்று குறிப்பிடுவது மிகையாகும். அவன் உண்டது உடலில் தங்கவேண்டுமாயின், அவனது பெற்றோரையும் உடன்பிறந்தாரையும் நல்ல முறையிலே பேண வேண்டியது மனைவியின் பொறுப்பாகும். 'அதைச் செய்; இதைக்கொடு' என்று கணவன் சொல்லிவிட்டுப் போய்விடுவான். செய்யவேண்டியதும் கொடுக்கவேண்டியதும் மனைவியின் தாராளகுணத்தைப் பொறுத்ததல்லவா? அவர்கள் குறைகூறும்படியாக மனைவி நடந்துகொண்டால் அது அவனுக்கும் தெரியவந்தால், அவன் உண்டது உடலில் தங்காது. அவனே முற்பட்டுச் செய்யவும் கொடுக்கவும் முற்பட்டால் அது போட்டி வாழ்க்கையாய், இன்பத்தை வேரறுத்துவிடும். அவன் மனைவியைச் சார்ந்து நின்று, பெற்றோரையும் உடன் பிறந்தாரையும் புறக்கணித்தால், ஊரெல்லாம் பழிக்க அவனுக்கு நிம்மதியான வாழ்க்கை அற்றுவிடும். எவ்வளவு செய்தாலும் குறைகூறித் திரிபவர்கள் உண்டு. அதற்கு என்ன செய்யமுடியும்? தன் மனச்சாட்சிக்கு மாறுபடாத வகையில் ஒருத்தி தன் கணவனின் உறவினரைப் பேணுதல் போதுமானது.

மனைவி தன் பெற்றோரையும் உடன்பிறந்தாரையும் உறவினரையும் பாசத்தோடு பேண முற்படுதல் இயற்கை. அதனில் ஏதேனும் குறை கண்டாலும் அவர்கள் அதனைப் பாசத்தோடு பொறுத்துப்போவர். அத்தகைய பாசம் இயல்பாகக் கணவனின் உறவினர்பால் அமைந்துகிடத்தல் இயலாது. அவர்களிடம் உறவுணர்ச்சியைக்காட்டிலும் உரிமையுணர்ச்சியே மேலோங்கி நிற்கும். தங்கள் வீட்டிற்குவந்து சேர்ந்தவள் தன் உறவினரிடம் என்னபேசுகிறாள், அவர்களுக்கு என்னென்ன செய்கிறாள் என்று கண்ணையும் காதையும் தீட்டிவைத்துக் கொண்டு பொருமத்தான் அவர்களுக்குத் தெரியும். நல்லகுணம்படைத்த பெண் இந்த இயற்கை நியதியை முற்றிலும் மாற்ற முடியாவிட்டாலும், இருவகையாரும் குறைகூற இயலாத வகையிலே நடந்துகொள்ளமுடியும். இதமானபேச்சு, ஆர்வமுள்ள கவனிப்பு, உண்மையான கலகலப்பு முதலிய வெளி அடையாளங்களால், அரைக்காசும் அதிகச் செலவில்லாமல், அத்தனைபேரின் அன்பையும் அவள் அடைந்துவிட முடியும். எவ்வளவு கவனித்தாலும் குறை எத்தனையோ இருக்கும். நம் அன்பும் ஆசாரமும் எத்தனையோ குறைகளை மறைத்துவிடும். குறைகூற எண்ணுவோரும் இந்த அன்பிற்கும் ஆசாரத்திற்கும் கட்டுப்பட்டு வாயை அடக்கிக் கொள்வர்.

நண்பர்களிடையே தன் கணவனுக்கு நன்மதிப்பைத் தேடித்தருபவள் நல்லமனைவி. உறவினர் கூறும் குறையெல்லாம் உலகவழக்கமாகக் கருதப்பட்டு அவ்வளவாக உறைப்பதில்லை. நண்பர்களின் மதிப்பீடு உண்மையான மதிப்பீடென்றே உலகம் கருதும். உலக ஆசாரமெல்லாம் ஒரு சிறிய நடைமுறையில் அமைந்துகிடக்கிறது. என் விருப்பம் நிறைவேற வேண்டும் என்று கருதுவதே மனித இயற்கை. இதனைச் சிறிது தளர்த்தி நம்மை நாடி வருவோரின் விருப்பத்திற்கு விட்டுக்கொடுக்கப் பழகிக் கொண்டோமாயின், எல்லாம் எளிதில் முடிந்துவிடும். நம் கருத்தைத் தெரிவிக்கக் கூடாதென்பதன்று. தெரிவித்தும் நாம் விட்டுக்கொடுத்தோம் என்றிருப்பதே நல்லது.

சத்தியபோதினி.

## தமிழ் மாணவ ஆசிரியர்கள்

வடமாகாணத்திலும், கிழ்மாகாணத்திலுமுள்ள பாடசாலைகளிலே தமிழ் மாணவ ஆசிரியர்கள் சுமார் நூறுபேர் ஆங்கில உதவி ஆசிரியர்களாக விரைவிலே நியமிக்கப்படவிருக்கிறார்கள். மாணவ ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பத்தாயிரம்பேரிலும் ஒன்பதாயிரம்பேர் சென்ற3-ந்திகதியன்று பதவியேற்றுவிட்டார்கள். இவர்கள் அனைவரும் சிங்களமாணவ ஆசிரியர்களே.

## மலாயாக் கிறிக்கெற் கோஷ்டி

மலாயாச் சர்வகலாசாலை மாணவர்களின் கிறிக்கெற்கோஷ்டி ஒன்று வருகிறபங்குனிமாத இறுதியில் யாழ்ப்பாணம்வந்துசேர்ந்து சித்திரை 1-ம் 2-ம் திகதிகளிலே யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிக்ளின் மாணவர்கள் கோஷ்டியுடன் போட்டியிடவிருக்கிறது. இதற்கானஏற்பாடுகளை வடமாகாணக்கல்லூரிகளின் அதிபர்கள்சங்கம் செய்துவருகின்றது.


விவசாய ரசாயன மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!
இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன்: 496.
கிளை
தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன்: 577.


இப்பத்திரிகை 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும். திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம்ஆண்டு மாசிமாதம் 8-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org